வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 22.02.2023 புதன்கிழமை | இதழ் : 75 | பக்கங்கள் : 16

# அம்பாறை, திருமலையில் தமிழருக்கு நேர்ந்தது முல்லைத்தீவிலும் நிகழும்!

## இதனையே சுமந்திரன் அரங்கேற்றுகின்றார் தமிழரசின் கொழும்பு கிளை தலைவர் சாடல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 22

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழர் வெற்றிபெற முடியாத நிலை உருவானது. தற்போது, தராசு சின்னத்தில் போட்டியிடும் முஸ்லிம் கட்சிக்கு வாக்களிக்குமாறு ஊக்குவிப்பதன்மூலம் சுமந்திரன் முல்லைத்தீவில் அதேபோன்ற விடயத்தை அரங்கேற்றுகிறார் - இவ்வாறு பகிரங்கமாக சாடியுள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவரும் சட்டத்தரணியுமான கே. வி. தவராசா. 15



## உள்ளூராட்சி தேர்தலை உடன் நடத்தவேண்டும்!

### மகிந்த ராஜபக்ஷவும் வலியுறுத்து

கொழும்பு, பெப். 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட வேண் டிய தேவை கிடையாது. உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை வலி யுறுத்தியுள் ளோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு 15

## தேர்தலை நடத்த வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் போராட்டம்!

### பாராளுமன்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 22

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்து மாறு வலியுறுத்தி பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தை நடத்த முடியாத நிலையில் இன்று 15



## போதிய பொலிஸ் பாதுகாப்பு இதுவரை வழங்கப்படவில்லை

### அரச அச்சக பணிப்பாளர்

கொழும்பு, பெப். 22

வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான போதுமான பாதுகாப்பை பொலிஸார் இதுவரை வழங்கவில்லை. இந் நிலையில் வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் மேலும் தாமதமடையும் என அரச அச்சக பணிப் பாளர் கங்கா லியனகே குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன் தினம் மாலைவரை 15

## சஜித் நாளை யாழ்.வருகிறார்!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாளை வியாழக் கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

தேர்தல் பிரசாரத்துக் காக யாழ்ப்பா ணம் வரும் அவர் 15

## தேர்தலுக்கான நிதியை திரட்டுவதற்கு தயார்!

PAFFREL

கொழும்பு, பெப். 22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை திரட்டுவதற்கு தேர்தல் கண்காணிப்பாளர்கள் தயாராக உள்ளனர் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பா ளர் ரோஹண ஹெட்டியா ராச்சி தெரிவித்துள்ளார்.

நிதிப் பற்றாக்குறை தான் உண்மையான பிரச்னை என்றால் தேர் தலுக்கான நிதியைப் பெறுவதற்கான பணி களை இந்த வாரத்தில் இருந்து தொடங்கத் தயார் என்றும் அவர் கூறி யுள்ளார்.

மேலும், மக்களின் உரிமைகளை சீர் குலைக் கும் வகையில் நிதிப் பிரச்னைகளை 15

## நாணய நிதியத்துடனான உடன்பாடு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப். 22

சர்வதேச நாணய நிதி யத்துடன் (ஐ. எம். எவ்.) உடன்பாடு எட்டப்பட்ட வுடன் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப் பிப்போம். அதனை நிறைவேற்றவோ அல்லது நிராகரிக்கவோ வாய்ப் புள்ளது - என்று ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கிங்ஸ் பெரி ஹோட்டலில் நேற்று நடந்த வரி தொடர்பான 15



## கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா மார்ச் 04 ஆம் திகதி!

### யாழ். மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

கச்சதீவு புனித அந் தோனியார் ஆலய திரு விழா எதிர்வரும் 03 ஆம் மற்றும் 04 ஆம் திகதிக ளில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட செயலா ளர் அ .சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலா ளர் அ.சிவபால சுந்தரம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, யாழ். மாவட்ட செயலாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் யாழ். ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செய லகம் மற்றும் தொடர்பு டைய திணைக்களங்களின் முழுமையான ஒத்துழைப் புடன் இம்முறை திருவிழா நடை பெறவுள்ளது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவை முன் னிட்டு எதிர்வரும் 15

## யாழ். போதனா மருத்துவ கழிவுகள் தெல்லிப்பழையில் எரிக்கப்படாது!

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்து வக் கழிவுகள் இனி தெல்லிப் பழையில் எரிக்கப்படாது என்று அதன் பதில் பணிப்பா ளர் மருத்துவர் சி. யமுனா னந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இனிவரும் நாட் களில் மருத்துவக்கழிவுகள் வவுனியாவில் எரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத் துவக்கழிவுகள் இதுவரை கால மும் தெல்லிப்பழையில் எரிக் கப்பட்டு வந்தன. ஆனால், உரிய சுகாதார முறைகள் பின் பற்றப்படாமல், சுற்றுச்சூழலி லுள்ள மக்களுக்கு ஆபத்தான முறையில் இந்த மருத்துவக் கழிவுகள் எரிக்கப்படுகின்றன என்று பல குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இது தொடர்பான காணொலி ஆதாரங்களும் வெளியாகியிருந்தன.

பல நாட்களாக இந்தக் குற்றச்சாட்டு நீடித்து வந்த நிலையில், “இனிமேல் மருத் துவக்கழிவுகள் தெல்லிப் பழைக்கு அனுப்பப் படாது என யாழ். 15

தமிழ் தேசிய கூட்டமைப்பு
TNA
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு மண்டபம். மண்டபத்துக்கு வெளியே சில நண்பர்களுடன் இந்த ஊர்க்குருவியும் நின்றுகொண்டிருந்தபோது அருகே வந்த நண்பர் ஒருவர் கேட்டார்.

"அண்ணே உங்களுக்கு எத்தனை வருச ஊடக அனுபவம்", என்று.

"அதை என்னத்துக்கடாப்பா உனக்கு இப்ப?", என்று கேட்டேன்.

"இல்லை சும்மா சொல்லுங்கோ?" அவன் விடுவதாக இல்லை. விடமாட்டான் என்பதும் தெரியும்.

"என்ன ஒரு இருபது வருசத்தக்கு மேலை ஆகிட்டுதடாப்பா. என்ன ஏதும் விருதுகிருது தரப்போறியோ?", என்று கேட்டேன்.

உள்ளே நமது தலைவர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்.

வெளியே ஒலிபெருக்கியில் தெளிவாக அவர் பேசுவது கேட்டது.

"இவர் இப்ப எப்பிடியும் ஒரு மணித்தியாலம் பேசுவார். உங்களால் முடிஞ்சால் இவற்றை பேச்சிலிருந்து ஒரு 'பொயின்ரை' எடுத்து அதைச் செய்தி ஆக்குங்கள் பார்க்கலாம்?", என்றான் நண்பன்.

இந்தச் சம்பவம்தான் அந்தச் செய்தியை படித்தபோது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.

கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்த கருத்துக்கள் நேற்றைய 'ஈழநாடு'வில் வெளிவந்திருந்ததை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

'ரெலோ கட்சியின் எம். பி. ஒருவர், தமிழரசு கட்சியை விபசார விடுதி எனக் குறிப்பிட்டார். இதனால் அதிருப்தி அடைந்தவர்கள் தனித்தனியாக போட்டியிட விரும்பினர். அதனாலேயே இந்த முடிவு எட்டப்பட்டது' என்று தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அங்கு வைத்து தெரிவித்திருக்கிறார்.

இதுவரை ஏதோ தொழில்நுட்ப காரணம் என்று சொன்னவர்கள் தமிழரசுக்காரர்கள். அதிகம் ஏன், மாவைகூட அதனையே முதலில் காரணமாக சொல்லி யிருந்தார். ஆனால், இப்போது அவர் சொல்லியிருக்கின்ற காரணம் என்ன என்பது நமக்கெல்லாம் தெரிந்தது தான்.

ரெலொ கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் வவுனியாவில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் அல்ல, இரண்டு வைபவங்களில் இதுபோன்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். அதனைத்தான் மாவை குறிப்பிடுகின்றார் என்பது தெரிந்ததுதான்.

அதில் ஒரு முக்கியமான விடயம், வினோ தமிழரசை மாத்திரம் அந்தக் கூட்டத்தில் விமர்சிக்கவில்லை. அவர் தனது கட்சித் தலைவரையும் அதிகம் ஏன் தன்னையும் சேர்த்துத்தான் கடுமையாக விமர்சித்தார்.

தற்போதைய தலைவர்கள் எவருமே தமிழர் பிரச்னை தீர வேண்டும் என்று நினைக்கவில்லை என்று தெரிவித்திருந்தார் அவர். இது அவரையும் சேர்த்துத்தான் என்பது கவனிக்க வேண்டியது. அப்போதே, இவரின் இந்தக் கருத்துக் குறித்து ஊர்க்குருவி எழுதியிருந்ததும் ஞாபகமிருக்கலாம்.

அது அல்ல நாம் இங்கே சொல்ல வருவது, தமிழரசுக் கட்சியை விபசார விடுதி என்று வினோ எம். பி. விமர்சித்ததால் தான் தனித்துப் போட்டியிட வேண்டி வந்தது என்று குறிப்பிட்ட மாவை, தொடர்ந்து பேசியபோது,

'இந்த தேர்தலில் கூட்டமைப்பாக இல்லாமல் தனித்தனியாக போட்டியிட்டு சிறு வாக்குகளால் விகிதாசாரத்தில் வந்து ஆட்சி அமைப்பதைத் தவிர்க்கும் தந்திரமாக போட்டியிடுகிறோம். தேர்தலின் பின்னர் நாங்கள் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முயற்சிப்போம். ஆட்சியமைப்பின் பின்னர் அனைத்து கட்சிகளையும் இணைத்து பயணிப்போம்.' - இதுதான் மாவையர் சொன் னது. இதனைப் புரிந்துகொண்டு தான் அதனைசெய்தி ஆக்கிய ஊடகர் செய்தி எழுதியிருப் பாரோ தெரியவில்லை. ஆனால், இதைத்தானே திரும்பத் திரும்ப தமிழரசுக்காரர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், தேர்தல் முடிந்த பின்னர் மற்றைய கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதெனில் யாரை என்பதையும் அல்லவா விளக்கமாக சொல்ல வேண்டும். உங்கள் கட்சிக்காரர் ஒருவர் சொன்னதுபோல தலையாட்டிகள், போதைப் பொருள் விற்பவர்களுடன் கூட்டுச்சேரப்போகின்றீர்களா? அல்லது டக்ளஸ், அங்கஜன், பிள்ளையானுடனா? அதுவும் இல்லையென்றால், உங்கள் கட்சிக்குள்ளேயே இருக்கும் சிறீதரன் அணி, சுமந்திரன் அணி போன்ற அணிகளை எல்லாம் இணைத்துக்கொண்டு பயணிக்கப்போகின்றீர்களா? தெளிவாக சொன்னால்தானே, உங்களுக்கு வாக்குப்போடாமல் அவர்களுக்கே தமிழ் மக்கள் வாக்குப் போட வசதியாக இருக்கும்.

அவர்களுடன் சேர்ந்துதான் நீங்கள் ஆட்சி அமைக்கப் போகின்றீர்கள் என்றால் அவர்களுக்கே வாக்கையும் போட்டு விடலாம்தானே.!

**- ஊர்க்குருவி**

# வாங்கிய கடன்களை அரசு தொடர்ந்தும் செலுத்துகிறது

## அமைச்சர் பந்துல தகவல்

கொழும்பு, பெப். 22

பல தரப்பு முகவர் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களை அரசாங்கம் தொடர்ந்தும் செலுத்தி வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, மக்களுக்கு சலுகைகளை வழங்கி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த திறைசேரியும் அரசாங்கமும் அயராது உழைத்து வருவதாக அவர் கூறினார்.

அரசியல் மாற்றம் நெருக்கடிக்கு தீர்வை வழங்காது என்றும், நாடு முன்னேற அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன வலியுறுத்தினார்.

(அ)

# தேர்தலை நடத்த தேவையான வசதிகளை அரசும் நிறுவனங்களும் செய்யவேண்டும்!

## பேராயர் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

கொழும்பு, பெப். 22

அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த இடையூறு ஏற்படாத வகையில் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருமாறு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்களின் அதிகாரிகளிடமும் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின்மீது அதிகரித்து வரும் பொதுமக்களின் அதிருப்தியே வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படுவதற்கான காரணம் என்றால், அதை எதிர்கொள்ளும் அளவுக்கு பணிவுடன் நடந்துகொண்டு முடிவுகளுக்கு ஏற்ப மாறவேண்டும்



என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தோல்விக்கு பயந்து கோழைகளாக வரலாற்றில் இடம்பிடிப்பதை தவிர்க்கும் அளவுக்கு நமது நாட்டு தலைவர்களுக்கு புத்திசாலித்தனம் இருப்பதாக தான் கருதுகிறார் என்றும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பேச்சாளர் சிறில் காமினி பெர்னாண்டோ நேற்று செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். இதிலேயே பேராயரின் இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டது.

மேலும், மார்ச் 9ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு அறிவித்த உள்ளாட்சித் தேர்தலை தடுக்க சில அரசு அதிகாரிகள் முயற்சிப்பதையும் இது காட்டுகிறது. அந்த அறிவிப்பின்படி, தேர்தலை நடத்துவதற்கு தேவையான சூழலை உருவாக்குவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் அரசமைப்புக்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

அனைத்து அரச நிறுவனங்களும் அரசாங்க அதிகாரிகளும் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் வழங்க கடமைப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சட்டவாக்க நிலையியல் குழுவுக்கு ஆறு உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, பெப். 22

பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், பைசல் காசிம், இம்ரான் மஹ்ரூப் உள்ளடங்கலாக ஆறு பேர் சட்டவாக்க நிலையியல் குழுவின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற நிலையியல் கட்டளை 113இன் ஏற்பாடுகள் மற்றும் கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றுக்கு அமைவாக பிரதி சபாநாயகரை தலைவராக கொண்ட சட்டவாக்க நிலையியல் குழுவில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர் விபரத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, பைசல் காசிம், அஜித் மன்னப்பெரும,கெவிந்து குமாரதுங்க, கோவிந்தன் கருணாகரம் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் சட்டவாக்க நிலையியல் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# பாராளுமன்ற அலுவல்கள் குழு பத்து உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, பெப். 22

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு உறுப்பினர்களாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ சுமந்திரன் மனோ கணேஷன், ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், உட்பட 10 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற நிலையியல் கட்டளை 115இன் ஏற்பாடுகள் மற்றும் கடந்த 10ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பவற்றுக்கு அமைவாக பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர் விவரத்தை சபாநாயக்கர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்போது சபாநாயகர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக, அநுரகுமார திஸாநாயக்க, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அதுகோரள, மனோ கணேசன், எரான் விக்கிரமரத்ன, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ. சுமந்திரன் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
22.02.2023 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் திட்டம்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்நேரமும் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். இதுவரையில், அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தி வந்த ராஜபக்ஷக்களின் மொட்டு தரப்பினர் ஏதோவொரு வகையில் ரணிலுடன் ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இதனை ஒரு துருப்புச் சீட்டாக ரணில் பயன்படுத்திக் கொள்வார். உள்ளூராட்சி தேர்தல் எதிர்பார்த்தவாறே பிற்போடப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி தேர்தலை பிற்போட்டமை தொடர்பில் எதிரணிகள் சத்தங்களை போட்டாலும்கூட, தேர்தலை நடத்துமாறு கூறி மக்களை அணிதிரட்டக் கூடிய நிலையில் எந்தவொரு கட்சியுமில்லை. கட்சியின் ஆதரவாளர்களை அணிதிரட்டி சில எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினாலும்கூட, சாதாரண சிங்கள மக்கள் இவ்வாறான எதிர்ப்புகளில் நாட்டம் கொள்ளப்போவதில்லை. ஏனெனில், சாதாரண மக்களின் உடனடி பிரச்சனை தேர்தல் அல்ல.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் கருத்தை ஆழமாக நோக்க வேண்டியிருக்கின்றது. அடுத்த ஆண்டு மக்கள் வாக்களிப்பின் மூலம் மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென்று தெரிவித்திருக்கின்றார். இதன் பொருள் என்ன? ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சி தேர்தலை குறிப்பிடுகின்றாரா அல்லது பாராளுமன்ற தேர்தலை குறிப்பிடுகின்றாரா அல்லது ஜனாதிபதி தேர்தலை குறிப்பிடுகின்றாரா? ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் ஜனாதிபதி தேர்தல்தான் முக்கியமானது. ரணில் எண்ணுவது போன்று, விடயங்களை முன்னெடுக்க வேண்டுமாயின் அவருக்கு அதிகாரம் வேண்டும். அதேவேளை, ராஜபக்ஷக்களை பொறுத்தவரையிலும் ரணிலை தவிர்த்து பிறிதொருவரை ஆதரிக்கக்கூடிய நிலையில்லை. இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷ தரப்பிலிருந்து எவரையும் நிறுத்தக் கூடிய சூழலும் இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமையே அவருக்கான வாய்ப்பாகும். ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க ஆற்றலும் அனுபவமும் உள்ள அரசியல்வாதியாக இருந்தாலும்கூட, சாதாரண சிங்கள மக்களின் அபிப்பிராயத்தை வெற்றிகொண்ட ஓர் அரசியல்வாதியாக அவரால் தன்னை இதுவரையில் நிரூபிக்க முடியவில்லை. ரணிலின் 45 வருடங்களுக்கும் மேலான அரசியல் வாழ்வில் சாதாரண சிங்கள மக்களின் மனதை வெற்றிகொள்ளும் அவரின் வியூகங்கள் எவையும் அவருக்கு கைகொடுக்கவில்லை.

ரணிலின் அரசியல் வாழ்வைப் பொறுத்தவரையில் இது அவருக்கான இறுதி சந்தர்ப்பமாகும். கிட்டத்தட்ட அரசியலில் காணாமல் போயிருந்த ஒருவர் மீளவும் ஜனாதிபதியாக வந்த அதிசயத்தை நிகழ்த்திய ரணில் விக்கிரமசிங்க இன்னொரு முறை ஜனாதிபதியாக இருப்பதற்கான இறுதி சந்தர்ப்பத்தை எவ்வாறு வெற்றிகொள்ளப் போகின்றார்? அதற்கு என்னவெல்லாம் செய்யப் போகின்றார்? எவரையெல்லாம் தன் பக்கம் சேர்க்கப் போகின்றார்? இனிவரப் போகும் காலம் ரணிலின் ஆட்டத்துக்கான காலமாகவே இருக்கப் போகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரையில் ரணில் தொடர்பில் எவ்வாறான அபிப்பிராயங்களை கூறிக்கொண்டாலும்கூட, அரசியல் ரீதியில் நோக்கினால், தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் அறிந்திருக்கும் விடயங்கள் தொடர்பில் பேசுவதில் ஆர்வமுள்ள தென்னிலங்கை அரசியல்வாதி என்றால் – ரணிலை தவிர்த்து வேறு எவரையும் குறிப்பிட முடியாது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ரணில் தமிழ் மக்களுக்கும் தேவையான ஒருவர்தான். ஆனால், அதற்காக அதீதமான நம்பிக்கையுடன் அணுகவேண்டியதில்லை.

# இந்தியா இலங்கைக்கு உதவுவதானால் இந்துகளுக்கு சமவாய்ப்பு வழங்குங்கள்

## ஜனாதிபதி ஆலோசகரிடம் அர்ஜூன் சம்பத் வலியுறுத்து

*கொழும்பு, பெப். 2*

இந்தியா அரசாங்கம் இலங்கையின் குரலுக்கு செவிமடுக்கவேண்டும் என்றால் இலங்கையில் அரசாங்கம் இந்துக்களுக்கு சமவாய்ப்பையும் மேன்மையும் வழங்க வேண்டும் என இந்திய இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜூன் சம்பத் கூறியுள்ளார்.



ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவை நேற்று அவர் சந்தித்தபோதே மேற்படி தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் எப்பொழுதும் இந்தியா பேணும் பாதுகாக்கும் வளர்க்கும். இந்தியாவின் இன்றைய அயல் நாடு முன்னுரிமைக் கொள்கையால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றுள்ள துன்பங்களும் என்றும் வரும் துன்பங்களுக்கும் வற்றாத உதவி கிடைக்கும்.

இன்று இந்தியாவை ஆளுகின்ற அரசு இலங்கையின் குரலுக்கு செவிமெடுக்க வேண்டும் என்றால் இலங்கையில் இந்துக்களுக்கு இலங்கை அரசு முன்னுரிமை - சம வாய்ப்பும் - மேன்மையும் கொடுக்க வேண்டும். இந்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கைத் திட்டத்தை நீங்கள் வகுக்க வேண்டும்.

யாழ்ப்பாண கலாசார நிலையத்துக்கு கடந்த வாரம் சரஸ்வதி மண்டபம் என பெயர் சூட்டியமையே இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்கின்ற இந்துக்களுக்கு மகிழ்ச்சி. அவ்வாறே கடந்த தீபாவளி நாளன்று குடியரசுத் தலைவர் அலுவலக வளாகத்தில் நந்திக் கொடியைப் பறக்க விட்டு இலங்கை இந்துக்களையும் இந்திய இந்துக்களையும் மகிழ்வித்தீர்கள்.

இவ்வாறு மாதந்தோறும் இந்துக்களுக்கான ஓர் எழுச்சி நிகழ்ச்சியை முன்னெடுத்துச் செல்வீர்களானால் உங்கள் குரலுக்கு இந்தியா செவி சாய்க்கும். இலங்கையில் இந்துக்களின் எண்ணிக்கை முன்பு 24வீதமாக ஆக இருந்தது இப்பொழுது 12.3 வீதமாகக் குறைந்துள்ளது. இந்த விகிதாசாரம் மேலும் குறையாமல் இருப்பதற்கு இலங்கை அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்துக்களின் எண்ணிக்கையைக் கடுமையாக குறைக்கிறார்கள். இந்தியாவின் பல மாநிலங்களில் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது போல இலங்கையிலும் மதமாற்ற தடைச் சட்டத்தை கொண்டு வர வேண்டும். முன்பு பசு பாதுகாப்புச் சட்ட மூலத்தைக் கொண்டு வந்தீர்கள். அதை இன்னமும் பாராளுமன்றம் நிறைவேற்றிச் சட்டமாக்கவில்லை. அதையும் சட்டமாக்குங்கள் - என்றும் கூறினார். (ஐ)

# 'தமிழ், சிங்கள எழுத்துகள்' நூல்கள் வெளியிடப்பட்டன!

*கொழும்பு, பெப். 22*

அரச கரும மொழிகள் திணைக்களம் தொகுத்த 'தமிழ் எழுத்துக்கள்' மற்றும் 'சிங்கள எழுத்துக்கள்' ஆகிய இரண்டு நூல்கள் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

சர்வதேச தாய்மொழி தினமான நேற்று இந்த நூல்களை பிரதமர் தினேஷ் குணவர்தன ஜனாதிபதியிடம் வழங்கி வைத்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் நடந்த இந்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும் கலந்து கொண்டார்.



சபாநாயகர் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நூல்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 22 செவ்வாய்க்கிழமை**
**சுபகிருது வருடம் - மாசி 10**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : துதிவியை**




**மேடம்**
புதிய முயற்சியில் லாபம் காண்பீர்கள். பெரியவர்கள் ஆதரவுடன் உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். அறிமுகம் இல்லாதவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம்.

**இடபம்**
வியாபாரத்தில் லாபகரமான முயற்சி அதிகரிக்கும் நாள். எதிர்பார்த்த தகவல் வரும். ஒரு சிலருக்கு இடமாற்றம் ஏற்படும்.வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள்.

**மிதுனம்**
உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் மேற் கொள்ளும் முயற்சி வெற்றியாகும். நினைத்ததை இன்று செய்து முடிப்பீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும். நிதிநிலை உயரும்.

**கடகம்**
இன்று செயல்களில் சங்கடங்களை சந்திப்பீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். நினைத்த செயல்களை நிறைவேற்ற முடியாமல் போகும். குழப்பம் அதிகரிக்கும்.

**சிம்மம்**
நண்பர்கள் உத வியால் லாபமும் மகிழ்ச்சியும் உண்டாகும். பிறர் உதவியுடன் எண்ணம் நிறைவேறும். வரவேண்டிய பணம் வரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் விலகும்.

**கன்னி**
உங்கள் முயற்சிகளில் லாபம் காண்பீர்கள். மற்றவரின் மனதைப் புரிந்து செயல்படுவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும் நாள். தடைகளைக் கண்டறிந்து விலக்குவீர்கள்.

**துலாம்**
பிள்ளைகள் மீது அக்கறை செலுத்துவீர்கள். எதிர்பார்த்த வருவாய் வரும். உறவுகளால் சில சங்கடம் அடைவீர்கள். குடும்பத்திற்குள் கருத்து வேறுபாடு உண்டாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். தொழிலில் இருந்து வந்த தடை விலகி வருமானம் அதிகரிக்கும் நாள். பணிபுரியும் இடத்தில் உங்களுக்குரிய செல்வாக்கு உயரும் நாள்.

**தனுசு**
கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்னைகள் சரியாகும். நீங்கள் எதிர்பார்த்த சேதி வரும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த வரவு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்

**மகரம்**
உங்கள் சாமர்த்தியத்தால் தொழிலில் இருந்து வந்த போட்டிகள் விலகும். குடும்பத்தில் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். புதிய வேலை தேடியவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும்.

**கும்பம்**
உங்களுக்கு தொல்லைக் கொடுத்தவர்கள் விலகிச் செல்வார்கள். உங்கள் விருப்பப்படி செயல்படுவீர்கள். தனியார் நிறுவனத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மீனம்**
மனதில் இருந்து வந்த குழப்பம் விலகும் என்றாலும் எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். உங்கள் தேவைகள் நிறைவேறும். குடும்பத்தினர் ஒருவருக்கு வீண் செலவு அதிகரிக்கும்.

# ‘தமிழைத் தேடி’ பயணத்தை நேற்று ஆரம்பித்தார் ராமதாஸ்

சென்னை, பெப். 22

“தமிழே ஆட்சி செய்ய வேண்டும்”, என்ற கோரிக்கையை வலியுறுத்தி பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் ‘தமிழைத் தேடி’ என்ற விழிப்புணர்வு பயணத்தை நேற்று செவ்வாய்க் கிழமை ஆரம்பித்தார்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆரம்பித்த இந்த நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

அனைத்து இடங்களிலும் தமிழே ஆட்சி செய்ய வேண்டும் என்ற நிலையை உருவாக்க வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் இந்த பயணம், சென்னையில் தொடங்கி மதுரையில் நிறைவடைய உள்ளது. 8 நாட்கள் நடைபெறும் இந்த விழிப்புணர்வு நடைபயணத்தில் தமிழ் அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கேற்க உள்ளனர்.

தமிழைத் தேடி பயண தொடக்க விழாவில் பேசிய ராமதாஸ், தமிழ்நாட்டின், பள்ளிக் கூடங்கள், ஆலயங்கள், உயர்நீதிமன்றம், வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், என எங்கும் தமிழ் இல்லை என்று தெரிவித்தார். மேலும், தாய்க்கும் குழந்தைக்குமான உரையாடல்களில்கூட தமிழ் இல்லை என்று வேதனை தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் எல்லா இடங்களிலும் தமிழே ஆட்சி செய்யும் நிலையை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, ‘தமிழைத் தேடி’ என்ற விழிப்புணர்வு பயணத்தை தான் மேற்கொள்வதாக தெரிவித்த அவர், தமிழை பாடசாலைகள், கல்லூரிகள், நீதிமன்றங்களில் எங்காவது பார்த்தேன் என யாராவது கூறினால், அந்த நபருக்கு 5 கோடி ரூபாய் பரிசு தருவதாக கூறினார்.

(ஐ)

# மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் பணிகள் நிறைவு!

## இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன்

சென்னை, பெப். 22

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ஏவூர்தி (றொக்கெட்) தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக இஸ்ரோ முன்னாள் தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

பொள்ளாச்சியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதில், “ககன்யான் என்பது மனிதர்களை பாதுகாப்பாக விண்ணுக்கு அனுப்பி 7 நாட்கள்

தங்கி சோதனைகள் செய்த பிறகு மீண்டும் பூமிக்கு திருப்பி வரும் திட்டமாகும். அதற்கான தயாரிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன. இதுவரை விண்ணுக்கு ஏவூர்திகள் மூலம் செயற்கைகோள்களை மட்டுமே அனுப்பிவந்தோம் மனிதர்களை அனுப்பும் போது பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. புதிய தொழில்நுட்பங்கள் தேவை. மனிதர்களை அனுப்பக்கூடிய வகையில் ஏவூர்தி உருவாக்க வேண்டும். அதற்கான பணிகள் முடிவடைந்து விட்டன.

மனிதர்களை விண்ணுக்கு அனுப்பியவுடன் பூமியில் இருப்பது போன்ற சீதோஷ்ண நிலையை ஏற்படுத்த வேண்டும். இதற்காக சுற்றுசூழலுக்கு இடையிலான தொடர்புகளை ஏற்படுத்தும் தொழில்நுட்ப பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மனிதர்கள் திரும்பி வரும் போது அதிகமான வெப்பத்தை தாங்க கூடிய தொழில் நுட்பம் தேவைப்படுகிறது. முக்கியமாக பூமியில் இறங்கும் போது இறங்கும் இடத்தை தேர்வு செய்வது உள்ளிட்ட பல தரப்பட்டசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

இவை அனைத்தும் முடிந்த பிறகு இரண்டு விண்கலங்களை மனிதர்கள் இல்லாமல் முதலில் ரோபோகளை அனுப்பி பின்னர் அதனுடைய செயல் திறன்களை ஆராய்ந்து

பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பிறகு தான் மனிதர்களை விண்ணுக்கு அனுப்புவார்கள் - என்றார்.

(ஐ)

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் இலங்கைமீது நடவடிக்கை அவசியம்!

## வெளிவிவகார அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

சென்னை, பெப். 22

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய இலங்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம் நம்பியார் நகர் மீனவ கிராமத்திலிருந்து 6 மீனவர்கள், நாட்டுப்படகில் மீன்பிடிக்க சென்றிருந்தனர்.

இந்த நிலையில் 15-2-2023 அன்று தோப்புத்துறைக்குக் கிழக்கே அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது 3 படகுகளில் வந்த சுமார் 10 இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள், தமிழக மீனவர்களின் மீன்பிடி படகை சூழ்ந்துகொண்டு அப்பாவி தமிழக மீனவர்களை இரும்புக் கம்பி, கட்டை, கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் தமிழக மீனவர் ஒருவரின் தலை மற்றும் இடது கையில் பலத்த காயமும், 5 மீனவர்களுக்கு உள் காயம் ஏற்பட்டுள்ளது. அதோடு தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் ‘வோக்கி-டோக்கி’, ‘ஜி.பி.எஸ். கருவி, ‘பற்றரி’ மற்றும் 200 கிலோ மீன் உள்ளிட்ட சுமார் ரூ.2 லட்சம் மதிப்புள்ள பொருட்களை இலங்கை நாட்டினர் எடுத்துச் சென்றுவிட்டனர். காயமடைந்த மீனவர்கள் தற்போது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்களால் அடிக்கடி நடத்தப்படும் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் மிகவும் வேதனையளிக்கிறது. மத்திய அரசு இதைக் கவனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் இதுபோன்ற வன்முறைச் செயல்கள் மீண்டும் நிகழாமல் இருக்கவும், இலங்கை நாட்டினரால் நடத்தப்படும் இத்தகைய தாக்குதல் சம்பவங்களைத் தடுக்கவும், தாக்குதல் நடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசுக்கு வலியுறுத்திட வேண்டும் - என்று கூறியுள்ளார். (ஐ)

# இடைத்தேர்தலுக்கு தடை கோரிய வழக்கு தள்ளுபடி!

சென்னை, பெப். 22

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலுக்கு தடை கோரிய வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

கோவை மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் சார்பில் தாக்கல் செய் யப்பட்ட இந்த மனுவில், தேர்தலின் போது வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க பல் வேறு சட்டங்கள் உள்ள நிலையிலும், வாக்களர்களுக்கு பணம் கொடுப்பது தொடர்வதாகவும், இதனை தடுக்க தேர்தல் ஆணையம் போதிய நடவடிக்கை எடுக் கவில்லை எனவே, இது தொடர் பில் நடவடிக்கை எடுப்பதுடன், அதுவரை ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை நடத்த தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த மனுவை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி ராஜா மற்றும் நீதிபதி ஏற்கனவே மற்றொரு வழக்கில் இதுசம்பந்த மான நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தார்.

(ஐ)

# விமல், கம்மன்பில, வீரசேகர 13இற்கு எதிராக ஓரணியில்!





**கொழும்பு, பெப். 22**

**"இலங்கைக்குச் சாபக்கேடான 13ஆவது திருத்தச் சட்டத்தை 22 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இல்லாதொழிக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம்."**

- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியாவில் குரல்கள் வலுத்துவரும் நிலையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு இலங்கையை அடக்கி ஆள இந்தியா முனைகின்றது. அதேவேளை, வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களும் இந்தத் திருத்தச் சட்டத்தின் ஊடாக தனிநாடு கோருகின்றார்கள். காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்னமும் பகிரப்படவில்லை என்று கூறி அதியுச்ச அதிகாரப் பகிர்வை அவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

இலங்கை பௌத்த-சிங்கள நாடு. மகாசங்கத்தினர் 13ஆவது திருத்தத்துக்கு அடியோடு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டம் எதற்கு? இந்தியாவின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் அதை முழுமையாக நீக்கவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது போல் 13 ஆவது திருத்தம் வேண்டாம் எனில் பாராளுமன்றத்தில் 22 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அதை இல்லாதொழிக்க வேண்டும். இதற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவோம்.

ஆளும் கட்சியிலும், எதிரணி வரிசைகளில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை விரும்பவில்லை. எனவே, இலங்கைக்குச் சாபக்கேடான 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க கட்சி, பேதமின்றி அனைவரும் ஓரணியில் திரளவேண்டும் - என்றனர். (அ)

# நாட்டின் வங்கித் துறையை பாதுகாக்க நடவடிக்கைகள்

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 22

நாட்டின் வங்கித் துறையை பாதுகாப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர், கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற 33ஆவது வங்கி ஊழியர் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

"தடைகளை பொருட்படுத்தாது, தற்போதைய நிலைமைக்கு அமைவாக வங்கி கட்டமைப்பை முன்னகர்த்துவோம்" என்ற தொனிப்பொருளில் தொழில்சார் வங்கி ஊழியர்களின் மாநாடு நடைபெற்றது.

இலங்கையின் வங்கித் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலர் இதில் கலந்துகொண்டனர். (அ)

# அதிவேக வீதிகளில் அறிவிடப்படும் கட்டணங்களை அதிகரிக்க தீர்மானம்

கொழும்பு, பெப். 22

அதிவேக வீதிகளில் அறவிடப்படும் கட்டணங்களை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பராமரிப்புச் செலவுகளை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும், மிகக் குறைந்தளவிலேயே கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

புதிய கட்டணத் திருத்தம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என அவர் மேலும் கூறினார். (அ)

# நீர் கட்டணத்தை செலுத்த இனிமேல் புதிய முறைமை

கொழும்பு, பெப். 22

நீர் கட்டணப் பட்டியலை வழங்கும் சந்தர்ப்பத்திலேயே அதற்கான கட்டணத்தை அறவிடும் புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முன்னோடித் திட்டத்தை வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய செயற்றிட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வரவுள்ளது.

புதிய முறைமையின் கீழ், நீர் கட்டணப் பட்டியலைச் சமர்ப்பிக்கும்போதே, வங்கி வரவட்டை அல்லது கடனட்டை மூலம் கட்டணத்தைச் செலுத்த முடியும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்தார். (அ)

# "துறைமுக நடவடிக்கைகளில் இருந்து கிடைக்கும் வருவாயை முதலீட்டுக்கு பயன்படுத்தவேண்டும்!"


கொழும்பு, பெப். 22

துறைமுக செயற்பாடுகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தை முதலீடுகளுக்கு பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், இந்த திட்டங்கள் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கிழக்கு கொள்கலன் முனையத்திற்கு 100 மில்லியன் டொலருக்கும் அதிகமாகவும், ஜயா கொள்கலன் முனையத்திற்கு 32 மில்லியன் டொலர்கள் கிடைக்குமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டு முனையங்களும் முழுமையாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானவை.



மேலும், திருகோணமலை துறைமுகத்தை மொத்த சரக்கு நடவடிக்கைகளுக்காகவும், காலி துறைமுகத்தை சுற்றுலா நோக்கத்திற்காகவும் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

காலி துறைமுகமானது படகுச் சேவைகளை எளிதாக்கும் வகையிலும் பெரிய கப்பல்களை தங்க வைக்கும் வகையிலும் உருவாக்கப்படும்.

இந்த முதலீடுகள், இந்தியப் பெருங்கடலில் தளவாடங்கள் மற்றும் போக்குவரத்து மையமாக மாறுவது மற்றும் பொருளாதார நடவடிக்கையை மேம்படுத்தும் இலங்கையின் பரந்த நோக்கத்தின் ஒரு பகுதியாகும்-என்றார். (அ)

# விவசாயிகளுக்கு இலவசமாக உரத்தை வழங்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 22

ட்ரிப்பல் பொசுப்பைற்று உரம் அடங்கிய கப்பல் ஒன்று அடுத்த மாதம் அளவில் நாட்டை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

36 ஆயிரம் மெற்றிக் தொன் ட்ரிப்பல் பொசுப்பைற்று அடங்கிய கப்பல் ஒன்றே இவ்வாறு நாட்டை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதியுதவியின் கீழ் இந்த உரம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

பெற்றுக்கொள்ளப்படவுள்ள இந்த உரத்தை சிறுபோகத்தில் நெல் பயிரிடவுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் பெரும்போகம் ஆரம்பிக்கப்படவுள்ளமையினால் 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் பொசுப்பைற்று உரத்தை பணத்துக்கு கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வியட்நாமில் வேலை தேடி அலைந்தபோது பணம் திருடிய இலங்கையர் மீது வழக்கு!

கொழும்பு, பெப். 22

வியட்நாமில் பணம் திருட்டு குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகையின்படி, 2020 மார்ச் முதலாம் திகதி ஹோ சி மின் நகரில் உள்ள "டான் சோன் நாட்" சர்வதேச விமான நிலையம் வழியாக வியட்நாமுக்குள் பிரவேசித்த 42 வயதான அருண ருக்ஷான் ராஜபக்ஷ என்ற குறித்த இலங்கையர், வேலை தேடுவதற்காக நாடு முழுவதும் பல இடங்களுக்குச் சென்றார்.

கடந்த 2022 ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி, ஹனோயின் ஹோன் கீம் மாவட்டத்தின் வீதிகளில் மற்றவர்களின் சொத்துக்களை திருடும் நோக்கத்துடன் சுற்றித் திரிந்ததாகவும், அன்று இரவு 8 மணியளவில், உணவகமொன்றுக்குள் நுழைந்து 13 மில்லியன் வியட்நாம் டோங் (545 அமெரிக்க டொலர்) பணம் அடங்கிய கறுப்பு கைப்பையை திருடி தப்பியோடினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பணப்பை திருடப்பட்டதை அறிந்ததும், உணவகத்தின் ஊழியரொருவர் உடனடியாக உதவிக் காக கூச்சலிட்டுள்ளார்.

பின்னர் உள்ளூர்வாசிகளின் உதவியுடன் இலங்கையர் மடக்கிபிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டாரென குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து கைப்பை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பொலிஸார் மேலதிக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஏப்ரல் மாதம் வரை போதுமான மசகு எண்ணெய் கையிருப்பில்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, பெப். 22

ஏப்ரல் மாதம் வரை போதுமான மசகு எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் தற்போது நாளொன்றுக்கு 30,000 பீப்பாய் எரிபொருள் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதாக கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

800 மில்லியன் ரூபா பெறுமதியான எரிபொருள், இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த எரிபொருள் தொகைக்கான கட்டணத்தை இலங்கை மின்சார சபை, எதிர்வரும் நாட்களில் செலுத்தவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் மேலும் கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நெப்டா, டீசல் மற்றும் பல எரிபொருள் வகைகள் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படுகின்றன.

உபரியான சுத்திகரிப்பு எரிபொருள் தொகை களஞ்சியப்படுத்தப்படுவதுடன், இவ்வாறு களஞ்சியப்படுத்தப்படும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் தொகையானது கப்பல்கள் மூலம் திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்துக்கு அனுப்பப்படுவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் இதன்போது தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு ஜெய்கா பாராட்டு

கொழும்பு, பெப். 22

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டம் சாதகமாக முன்னேறி வருவதாகவும், எதிர்காலத்தில் தமது வேலைத்திட்டங்கள் ஊடாக ஆதரவளிக்கப்படும் எனவும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தின் (ஜெய்கா) தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டெருயூகி இடோ தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கும், டெருயூகி இடோவுக்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில், இந்த நாட்டின் பொருளாதார நிலைமையை மீட்டெடுக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இதன்போது, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வேலைத்திட்டம் தொடர்பில் மேலும் விளக்கமளித்தார்.

பல வருடங்களாக மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பு தற்போது படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த மறுசீரமைப்புகள், சிரமமேயானாலும் மக்கள் தகவமைத்துக் கொண்டிருப்பதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவின் மூலம் நாட்டின் பொருளாதார உறுதிப்பாடு மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# தொடர்ச்சியாக கடன் பெறுவதால் நாட்டில் பொருளாதார நெருக்கடி!

## சுட்டிக்காட்டுகின்றார் அமைச்சர் சுசில்



**கொழும்பு, பெப். 22**

**கடந்த காலத்தில் ஏற்பட்ட பெரும் வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையினால் ஏற்பட்ட உற்பத்திப் பொருளாதாரத்தில் முன்னேறத் தவறியதன் விளைவாகவும் நட்டத்தை ஈடுகட்ட தொடர்ச்சியாக கடன் வாங்குவதாலும் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

உற்பத்திப் பொருளாதாரம் தொழில்நுட்பத்துடன் இணைக்கப்படவேண்டும் என்றும், வெறும் விளக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்படாமல் தீர்வுகளைத் தேடவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை கொரியா தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் மொழி ஆய்வுகூடத்தை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் அமைச்சர் பிரேமஜயந்த கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முழுக் கல்வி முறையும் மாற்றியமைக்கப்படவேண்டும். புதிய கல்வி மாற்றத்தின் மூலம் மூன்று துறைகள் தற்போதைய சவால்களுக்கு தொழில்நுட்ப தீர்வுகளை தேடுவதற்காக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை போன்ற நிறுவனங்களுடன் பொது, தொழிற்கல்வி மற்றும் உயர் கல்வியை ஒருங்கிணைக்க முடியும்.

மக்களின் அரசியல் கருத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பது பொருத்த மற்றது.

தற்போதுள்ள தொழிலாளர் வளங்களில் திருப்தி அடைவதுடன், புதிய தொழில்நுட்பத்தை புறக்கணிப்பது பொருத்தமற்றது என்றும், 2030 நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தொழில்நுட்பத்தை புத்திசாலித்தனமாக பயன்படுத்தவேண்டும்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றை இணைத்து ஒரு தசாப்த காலத்துக்குள் முன்னேறும் இலக்கை அடைந்துள்ள ஜப்பானை உதாரணமாகக் கொள்ளக்கூடிய தற்போதைய தகவல் தொடர்பு யுகத்தில், இலங்கையானது ஜப்பானை உதாரணமாகக் கொள்ள முடியும் - என்றார். (அ)

# ஐ.நா. படையில் பணி புரிந்த இலங்கை வீரர் திடீர் மரணம்

கொழும்பு, பெப். 22

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படைப் பிரிவில் கடமையாற்றிய இலங்கை படை வீரர் திடீரென உயிரிழந்துள்ளார்.

மாலி நாட்டில் கடமையாற்றி வந்த குறித்த இலங்கை படைவீரர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மதவச்சி பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஜீ.எல்.தேசப்பிரிய என்ற லான்ஸ் கோப்ரல் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

43 வயதான குறித்த படைவீரர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022ஆம் ஆண்டில் அமைதி காக்கும் பணிகளுக்காக மாலி சென்ற குறித்த படைவீரர் நாடு திரும்பவிருந்தார்.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக குறித்த படைவீரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த படைவீரரின் சடலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட உள்ளது. (அ)

# லாப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன்களில் மோசடி!

கொழும்பு, பெப். 22

லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்துக்கு சொந்தமான மஞ்சள் நிற எரிவாயு கொள்கலன்களை நீல நிறத்தில் நிறம் மாற்றி ஏற்றிச்சென்ற பாரவூர்தி ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கடவத்தை அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவுப் பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே குறித்த பாரவூர்தி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது, லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்திற்கு சொந்தமான மஞ்சள் நிற எரிவாயு கொள்கலன்கள் நீல நிறத்தில் நிறம் மாற்றி எடுத்துச்செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது. (அ)

# வலிகாமம் கிழக்கு பற்றிய நூல் வெளியீடு நீர்வேலியில்

யாழ்ப்பாணம், பெப். 22

நீர்வேலியூர் த.பரராஜசிங்கம் எழுதிய வளம் மிகுந்தது வலிகாமம் கிழக்கு என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ம.பிரதீபனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் சுபாஜினி மதியழகனும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் இ. பகீரதனும். கலந்து கொள்வர். நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் தி.வேல்நம்பியும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச. லலீசனும் வழங்குவர்.

புத்தூர் சிறி சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் சி. திரிகரன் மற்றும் அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். நீர்வேலி தெற்கைச் சேர்ந்த சி. சிவலிங்கம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். (அ)

# நெருக்கடி நிலையை சந்திக்கப்போகும் வேட்பாளர்களான அரச அலுவலர்கள்!

கொழும்பு, பெப். 22

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் சம்பளமற்ற விடுமுறையில் போட்டியிடும் அரச ஊழியர்கள் தேர்தல் தாமதம் காரணமாக மூன்று மாதங்களுக்கு பணிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால், வேட்புமனு தாக்கல் செய்த நாளிலிருந்து மூன்று மாதங்கள் ஊதியம் இல்லாத விடுமுறையில் இருக்கவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, வேட்புமனு தாக்கல் செய்த மூன்று மாதங்களுக்குப் பிறகு அரச ஊழியர்கள் தாங்கள் பணிபுரிந்த இடத்திற்குத் திரும்பலாம் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சுமார் 3000 அரச ஊழியர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

நிதி உள்ளிட்ட போதிய வசதி கிடைக்கப் பெறாமையினால் முன்னர் உறுதியளித்தப்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# சகல மாணவர்களும் வெளியேறினால்தான் பல்கலைக்கழகம் மீண்டும் ஆரம்பிக்கப்படும்

## சப்ரகமுவ துணைவேந்தர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 22

சப்கரமுவ பல்கலைக்கழகத்தில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களும் வெளியேறினால் மாத்திரமே மீண்டும் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் உதய ரத்நாயக்க தெரிவித்தார்.

சப்கமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் முகாமைத்துவ பீடத்தில் முதலாம் வருட மாணவர்களுக்கு பிறிதொரு மாணவ குழுவுக்குமிடையில் மோதல் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து கடந்த 16 ஆம் திகதி காலவரையரையின்றி பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு நிர்வாகம் தீர்மானித்திருந்தது.

மீண்டும் மாணவர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதனை தவிர்க்கும் வகையில் மாணவர்களை பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டது.

எனினும் சில மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திலேயே தங்கியுள்ளதாகவும், அவர்களை வெளியேறுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் கட்டளையை பின்பற்றாது மாணவர்கள் தொடர்ந்து தங்கியிருப்பதால் கற்பித்தல் செயற்பாடுகளை விரைந்து ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுவதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் உதய ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# 120 பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரே இரவில் கொல்ல சதித் திட்டம்!

## சனத் நிஷாந்த பரபரப்பு தகவல்

கொழும்பு, பெப். 22

**கொழும்பு - காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த கோட்டா கோ ஹோம் போன்று நாடு முழுவதும் 120 ஐ அமைத்து 'மொட்டு'வின் 120 பாராளுமன்ற உறுப்பினர்களை அவர்களின் குடும்பங்களுடன் ஒரே இரவில் கொல்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.**



தெற்கு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் உத்தியோகபூர்வ இல்லங்களில் ஜே.வி.பியினர் திருட்டுத்தனமாகத் தங்கி இருக்கின்றனர் என்ற தகவல் கிடைத்துள்ளது.

எங்களது வீடுகளை எரித்தவர்கள் இவர்கள். இந்த நாட்டுக்கு அநியாயம் செய்தவர்கள் இவர்கள். இவர்களுக்கு வாக்கு வங்கி கிடையாது.

ஜே.வி.பி. உறுப்பினர்கள் அனைவரினதும் பிள்ளைகள் படித்தது வெளிநாட்டில்தான். திம்புலாகல பிரதேச சபைக்கு ஜே.வி.பி.யில் போட்டியிடும் உறுப்பினர் ஒருவர் சாராயக் கடைக்குச் சொந்தக்காரர்.

அனைத்துக் கட்சிகளிலும் பிழை செய்பவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், ஜேவி.பி. மட்டும் தப்பு செய்யாதவர்கள் போல் நடிக்கின்றார்கள்.

நாம் மிகவும் திறமையுள்ள அனுபவமுள்ள ஒருவரை தான் ஜனாதிபதியாக நியமித்துள்ளோம்.

இப்போது பொருளாதார நிலைமை மெல்ல மெல்ல சரியாகி கொண்டு வருகின்றது.

பயங்கரவாதிகள் சிலர் பலவந்தமாக நாட்டைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்த நேரம் அது. பாராளுமன்றத்தை பலவந்தமாகக் கைப்பற்ற முயற்சி செய்தார்கள். அவ்வாறு நடந்திருந்தால் நாடு எங்கேயோ சென்றிருக்கும்.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த கோட்டா கோ ஹோம் போன்று நாடு முழுவதும் 120 ஐ அமைத்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் 120 பாராளுமன்ற உறுப்பினர்களை அவர்களின் குடும்பங்களுடன் ஒரே இரவில் கொல்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இதன் பின்னணியில் ஜே.வி.பியினர் இருந்தார்கள் - என்றார். (அ)

# முதலீடுகளுக்கு துரிதமாக அனுமதி வழங்க பொருளாதார ஆணைக்குழு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 22

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் முதலீடுகளுக்கான அனுமதியை துரிதமாக பெற்றுக்கொடுக்க பொருளாதார ஆணைக்குழு வொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதி பெறுவதற்கு நீண்ட காலம் செல்வது சிக்கலானது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதனால் நாடு பாரியளவு வருமானத்தை இழந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

கண்டி, ஹந்தானையில் நிர்மாணிக்கப்பட்ட நாட்டின் முதலாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா மற்றும் சூழல் சுற்றுலா வலயத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை கூறினார்.

முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு பதிலாக பொருளாதார ஆணைக்குழு வொன்றை நியமித்து ஒரே நிறுவனத்தினால் முதலீடுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய பொருளாதாரப் பயணத்துடன் இலங்கை முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் முதலீட்டு வாய்ப்புகள் அதிகரிக்கப்படவேண்டும்.

முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்ததன் பின்னர், அவர்களது வர்த்தகங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு 10 வருடங்கள் செல்கிறது. இந்தநிலையை மாற்றவேண்டும்.

புதிய பொருளாதார திட்டத்தின் கீழ் உற்பத்தி, ஏற்றுமதி பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பத் துறைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

ஒரு முதலீட்டாளர் இலங்கைக்கு வந்து முதலீடு செய்ய 10 வருடங்கள் எடுத்துக் கொண்டால் அதன் மூலம் பொருளாதாரத்திற்கு நன்மை கிடைக்காது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன மூன்று மாத குறுகிய காலப்பகுதியில் பெரிய கொழும்பு பொருளாதார திட்டத்தை நிறைவேற்றி அதனை ஆரம்பித்து வைத்ததால், அதன் பொருளாதார நன்மை இலங்கைக்கு கிடைத்தது.

ஜனாதிபதி பிரேமதாஸவின் 200 ஆடைக் கைத்தொழில் வேலைத்திட்டம் மூன்று வாரங்களில் அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாறு முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிக்காவிட்டால் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியாது.

முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பவற்றுக்குப் பதிலாக, பொருளாதார ஆணைக்குழுவை நியமித்து, ஒரே நிறுவனத்தால் முதலீடுகளுக்கு அனுமதி அளிக்கும் முறையை கொண்டு வரவேண்டும்.

அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு அமைச்சர் திலும் அமுனுகமவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும். அதன்படி, எதிர்காலத்தில் அதை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம்- என்றார். (அ)

# உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடி

## மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடே காரணம்

கொழும்பு, பெப். 22

நாட்டில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு தேவையான மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக இந்த நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

நாடு முழுவதிலும் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதில், இவ்வாறு மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சத்திர சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்கள் விநியோக நிறுவனமொன்றுக்கு அரசாங்கம் 500 மில்லியன் ரூபா நிலுவைப் பணம் செலுத்த வேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனால் மருந்துப் பொருட்கள் இறக்குமதி தற்காலிக அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உயிராபத்தை எதிர்நோக்கியுள்ள நோயாளிகள் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக சத்திர சிகிச்சை மேற்கொள்ள காத்திருக்கும் நோயாளிகள் உயிராபத்தை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதாகவும் இதனை நோயாளிகளினால் செலவிட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கடவுச்சீட்டு விநியோகத்தில் இடம்பெறும் பெரும் மோசடி!

## இலட்சக்கணக்கில் பணம் பெறும் அதிகாரிகள்

கொழும்பு, பெப். 22

கடவுச்சீட்டு விநியோகத்தில் ஈடுபட்டுள்ள சில அதிகாரிகள் நாளொன்றுக்கு சுமார் பத்து இலட்சம் ரூபாவை மோசடியாக பெற்று வருவதாக குடிவரவுத் திணைக்கள ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய கருத்து தெரிவிக்கையில்-

தரகர்கள் குழுவொன்றும், சில அதிகாரிகளும் இவ்வாறு இலஞ்சம் பெறும் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கமைய, இலஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகள், இரகசிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஏற்கனவே இலஞ்சம் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அலுவலக உதவியாளர் ஒருவரும் மூன்று தரகர்களும் இலஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு இலஞ்சம் பெற்றவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக சிலர் செயற்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

கொரிய மொழிப் புலமைத் தேர்வில் கலந்து கொள்பவர்கள் நாளொன்றுக்கு ஏழாயிரம் பேர் கடவுச்சீட்டு பெறுவதற்காகத் திணைக்களத்துக்கு வருகின்றனர்.

இதன்போது இலஞ்சம் வாங்கும் மோசடி நடப்பதாகவும், அந்தத் துறையின் அதிகாரிகள் குழுவும் இதில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதிகாரிகள் மற்றும் தரகர்கள் சிலர் வெளிநாட்டுத் துப்பாக்கி உரிமத்தை ஏற்பாடு செய்ய சுமார் 40 ஆயிரம் ரூபாய் வசூலிக்கிறார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (அ)

# விமானக் கட்டுப்பாட்டாளர் பதவிக்கு புதிதாக 50 பேர்!

கொழும்பு, பெப். 22

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் பதவிக்காக 50 பேரை புதிதாக பயிற்சிக்கு இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் பற்றாக் குறையை தவிர்க்கும் வகையில் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அண்மையில் இரத்மலானை சிவில் விமானப் பயிற்சிப் பாடசாலைக்கு விஜயம் செய்த போதே அவர் இந்த அறிவித்தலை விடுத்தார். (அ)

# ரஷ்யாவின் மலிவு விலை கச்சா எண்ணெய் இந்தியாவை வேறு வகையில் பாதிக்கிறதா?





**இக்பால் அகமது**

2022 பெப்ரவரியில் ரஷ்யா உக்ரெனைத் தாக்கியது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு தடைகளை விதித்தன. அதை சமாளிக்க சர்வதேச சந்தையை விட குறைந்த விலையில் இந்தியா உட்பட உலகின் பல நாடுகளுக்கு கச்சா எண்ணெயை விற்க ரஷ்யா முன்வந்தது.

ரஷ்யாவின் கோரிக்கையை இந்தியா ஏற்றுக்கொண்டது. தேசிய நலன் கருதி எடுக்கப்பட்ட இந்த முடிவு காரணமாக இந்தியா, அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகளின் அதிருப்தியை சம்பாதித்தது.

ஆனால், இந்தியாவின் இந்த முடிவு இப்போது கவலையை ஏற்படுத்தும் விஷயமாகவும் ஆகக்கூடும்.

கச்சா எண்ணெயை அதிக அளவில் வாங்குவதால் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்து வருவதாக ப்ளூம்பெர்க் செய்தி முகமை தனது அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது. இதன் ஒரு விளைவு என்னவென்றால், வெளிநாட்டு வர்த்தகத்தை ரூபாயில் செய்யும் மோடி அரசின் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

டில்லியில் உள்ள ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ரஷ்ய மற்றும் மத்திய ஆசிய ஆய்வு மையத்தின் பேராசிரியர் அமிதாப் சிங் இதைப்பற்றி விளக்கமாக கூறுகிறார்.

தற்போதைய சூழ்நிலையைப் புரிந்து கொள்ள, இந்தியாவிலும் ரஷ்யாவிலும் முன்பு வர்த்தகம் எவ்வாறு நடந்தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது என்கிறார் அவர்.

இந்தியா தனது பாதுகாப்பு உபகரணங்களுக்காக ரஷ்யாவை அதிகம் சார்ந்துள்ளது. ஆனால் இந்த வணிகத்தின் முறை என்னவென்றால், இந்தியா தனது ஆயுதங்களை வாங்குவதற்குப் பயன்படுத்தும் அதே அளவு பணத்திற்கு ரஷ்யாவிற்கு தனது பொருட்களை ஏற்றுமதி செய்யும். எனவே உண்மையான பணப் பரிமாற்றம் நடக்கவில்லை.

ஆனால், 2022 பெப்ரவரிக்குப் பிறகு ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கத்தொடங்கியதில் இருந்து நிலைமை மாறிவிட்டது.

### ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி

'இதுவரை இந்தியா ரஷ்யாவில் இருந்து ஒரு சதவிகித கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வந்தது. தற்போது கச்சா எண்ணெய் இறக்குமதி 20 சதவிகிதத்துக்கும் மேல் உயர்ந்துள்ளது," என்று பேராசிரியர் அமிதாப் சிங் சுட்டிக்காட்டினார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தினமும் சுமார் 12 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் வாங்குகிறது. கச்சா எண்ணெய் மட்டுமின்றி ரஷ்யாவிலிருந்து சமையல் எண்ணெய் மற்றும் உரங்களையும் இந்தியா இறக்குமதி செய்து வருகிறது.

ஆனால் இரண்டாவது கவலை என்னவென்றால் இறக்குமதி அதிகரித்து வரும் அதே நேரம் இந்தியாவின் ஏற்றுமதி குறைந்து வருகிறது. இறக்குமதி சுமார் 400 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றும் ஏற்றுமதி சுமார் 14 சதவிகிதம் குறைந்துள்ளது என்றும் ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.



இந்தியாவும் ரஷ்யாவும் உள்ளூர் கரன்சியில் (ரூபாய் மற்றும் ரூபிள்) வர்த்தகம் செய்ய முடிவு செய்திருந்தன.

இந்திய ரிசர்வ் வங்கி 2022 ஜூலையில் இதை அறிவித்தது. கூடவே ரஷ்ய வங்கிகள் இந்தியாவில் Vostro கணக்குகளை திறக்க அனுமதித்தது.

### ரஷ்ய வங்கிகளில் குவியும் இந்திய ரூபாய்

இந்தியாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கு டாலருக்கு பதிலாக ரூபாயில் தொகையை செலுத்தும் வசதியை வோஸ்ட்ரோ கணக்கு மூலம் பெறுகின்றன. இந்தியாவில் வேஸ்ட்ரோ கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை ரஷ்யாவுடன் ரூபாய் மூலமான அதிக கொடுக்கல் வாங்கல் நடக்கவில்லை. ஏனெனில் இந்தியாவின் அதிக இறக்குமதி காரணமாக இந்திய ரூபாய் ரஷ்யாவில் அதிகமாக குவிந்து வருகிறது.

தங்களிடம் ரூபாய் அதிகமாக சேர்வதை ரஷ்யாவின் வங்கிகள் விரும்பவில்லை.

இந்தியா இதுவரை சுமார் 30 பில்லியன் டாலர் மதிப்பிலான கச்சா எண்ணெய்யை வாங்கியுள்ளது, அந்த பணம் ரஷ்ய வங்கிகளில் கிடக்கிறது என்று பேராசிரியர் அமிதாப் சிங் கூறுகிறார்.

'தடை விதிக்கப்பட்டிருப்பதால் அந்த இந்திய பணத்தை சர்வதேச வர்த்தகத்திற்கு, ரஷ்யா பயன்படுத்த முடியாது. அதனால், ரஷ்யாவிடம் டெபாசிட் செய்யப்பட்டுள்ள ரூபாயின் மதிப்பு குறைந்து வருகிறது. டாலருக்கு நிகரான ரஷ்ய பணமான 'ரூபிளின்' மதிப்பும் குறைந்து வருகிறது," என்று அவர் மேலும் கூறினார்.

பல தசாப்தங்களாக ரஷ்யாவில் வசிக்கும் மூத்த செய்தியாளர் வினய் சுக்லா, ரஷ்ய வங்கிகள் இரண்டாம் கட்ட தடைக்கு பயப்படுகின்றன என்று கூறுகிறார்.

இன்னொரு காரணத்தைக் குறிப்பிடும் வினய் சுக்லா, ரஷ்யாவில் மக்களின் விருப்பங்கள் மாறிவருவதாகவும், இந்திய தொழிலதிபர்களால் ரஷ்ய மக்களுக்கு விருப்பமான பொருட்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்ய முடியவில்லை என்றும் கூறுகிறார்.

'இதுவரை இந்தியாவில் இருந்து வந்த அல்லது வரக்கூடிய பல பொருட்களை சீனாவில் இருந்து ரஷ்யா இப்போது இறக்குமதி செய்கிறது. இந்தியாவின் ஏற்றுமதி குறைவதற்கு இதுவும் ஒரு காரணம்," என்று வினய் சுக்லா குறிப்பிட்டார்.



### மௌனம் ஏன்?

ரஷ்யாவிடம் இருந்து மலிவு விலையில் கச்சா எண்ணெயை வாங்கும் இந்தியா, அந்த கச்சா எண்ணெய்யை இந்தியாவில் சுத்திகரித்து மேற்கத்திய நாடுகளுக்கு விற்பனை செய்து வருகிறது.

இந்தியா தற்போது இதன் மூலம் டாலர்களை சம்பாதித்து வருவதால், இந்தியாவில் யாரும் இது குறித்து கவலை தெரிவிக்கவில்லை என்று பேராசிரியர் அமிதாப் சிங் கூறுகிறார். ஆனால் இது நீண்ட காலம் நீடிக்காது என்கிறார் அவர்.

முன்னதாக இந்திய வங்கிகள் தங்கள் வெளிநாட்டு கணக்குகளில் இருந்து பணத்தை எடுத்து ரஷ்யாவிடம் கொடுத்து வந்தன. இந்திய வங்கிகளுக்கு சிங்கப்பூரில் கணக்கு இருந்தது. ஆனால் ரஷ்யாவுடன் வணிகம் செய்ய முடியாது என்று அமெரிக்கா அதன் மீது தடை விதித்தது. தற்போது ஹாங்காங் வங்கி மூலம் பணம் செலுத்தும் முறை செயல்பட்டு வருகிறது. அது நீண்ட காலம் நீடிக்காது என்று பேராசிரியர் அமிதாப் சிங் தெரிவித்தார்.

'நீண்ட கால அடிப்படையில் இது இந்தியாவுக்கு கவலையளிக்கும். கூடவே அது பொருளாதாரத்திற்கு தீங்கும் விளைவிக்கும்,"என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக இந்திய மற்றும் ரஷ்ய அதிகாரிகள் கடந்த மாதம் ஒரு கூட்டத்தை நடத்தினர். ஆனால் குறிப்பிடத்தக்க முடிவு எதுவும் வெளியாகவில்லை.

### திர்ஹாமில் பணம் செலுத்துதல்

தற்போது இரு நாடுகளாலும் இதற்கான எந்த தீர்வையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று பேராசிரியர் அமிதாப் சிங் கூறினார்.

ரிலையன்ஸ் நிறுவனம் ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெயை பெரிய அளவில் இறக்குமதி செய்து ஐக்கிய அரபு அமீரகத்தின் (யுஏஇ) கரன்சியான திர்ஹாம் மூலம் ரஷ்யாவுக்கு பணம் செலுத்தி வருகிறது. ஆனால் இதுவும் நீண்ட காலம் நீடிக்காது என்று பேராசிரியர் அமிதாப் சிங் குறிப்பிட்டார்.

'ரஷ்ய வங்கிகளில் ரூபாய் டெபாசிட் செய்யப்படுவதைப் போலவே, திர்ஹாமும் தொடர்ந்து டெபாசிட் செய்யப்பட்டால், ரஷ்ய வங்கிகள் அவற்றை என்ன செய்யும்," என்று அவர் கேள்வி எழுப்பினார்.

### என்ன தீர்வு?

பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) நாடுகளுக்கு இடையே ஒரு நியூ டெவெலெப்மென்ட் வங்கி உருவாக்கப்பட்டது. அதில் பிரிக்ஸ் நாடுகள் உள்ளூர் நாணயத்தில் வணிகம் செய்யலாம் என்று பேராசிரியர் அமிதாப் சிங் சுட்டிக்காட்டினார்.

ஆனால் சீனா தனது வங்கிகளில் கடுமையான விதிகளை அமல்படுத்துகிறது. கூடவே சீனாவின் பொருளாதாரம் மிகப் பெரியது என்பதால் அதன் உதவியின்றி இது வெற்றி பெற முடியாது.

இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் வர்த்தக சமநிலை பராமரிக்கப்பட்டது. ஆனால் இன்றைய தேதியில் அது சாத்தியமில்லை, ஏனெனில் இந்தியாவால் தனது ஏற்றுமதியை அதிகரிக்க முடியவில்லை. கூடவே இறக்குமதியையும் குறைக்க முடியாது.

'ரஷ்யாவின் மத்திய வங்கி உள்ளூர் நாணயத்தில் சர்வதேச வர்த்தகம் செய்ய புதிய துறையை உருவாக்கியுள்ளதாக புதன்கிழமை அறிவித்தது. இந்த முடிவின் மூலம் விஷயங்கள் மேம்படும் என்ற நம்பிக்கை உள்ளது," என்கிறார் செய்தியாளர் வினய் சுக்லா.

●

# தேர்தல் செயல்முறையும் ஓர் அத்தியாவசிய சேவையே

உள்ளூராட்சி தேர்தல்கள் திட்டமிட்டபடி மார்ச் 9 ஆம் திகதி இடம்பெறுவதற்கான சாத்தியமில்லை. தேர்தல் ஆணைக்குழுவினால் முன்கூட்டியே கொடுப்பனவு செய்யப்படாவிட்டால் வாக்குச்சீட்டுக்களை அச்சிட முடியாது என்று அரசாங்க அச்சகர் மறுத்ததன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதில் தாமதம் மற்றும் தபால்மூல வாக்களிப்பை உரியகாலத்தில் நிறைவு செய்வதில் ஏற்பட்டிருக்கும் சிக்கலின் விளைவாக தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டிய தேவை ஏற்படலாம் என்று தேர்தல் ஆணைக்குழு கூறியிருக்கிறது.

இந்த எதிர்பாராத நிகழ்வுப்போக்குகள் நாட்டின் ஜனநாயக செயல்முறையை ஆபத்துக்குள்ளாக்குகின்றன. அரசாங்க திணைக்களங்கள் கடன் மூலம் கொள்வனவுகளைச் செய்வதற்கு அனுமதிப்பதில்லை என்று அரசாங்கம் எடுத்த முடிவையடுத்தது. முன்கூட்டிய கொடுப்பனவுகள் இல்லாமலேயே வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணியை அரசாங்க அச்சகர் பொறுப்பேற்கும் ஒரு நீண்டகால நடைமுறை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டாருக்கிறது.

இது அரசாங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நிதியளிக்கப்படுகின்ற இரு அரசாங்க நிறுவனங்களுக்கு இடையிலான ஒரு உள்ளக பிரச்சினையாக இருப்பதால் இந்த சிக்கல் ஒரு அபத்தமாகும். இந்த நேரத்தில் தேர்தலுக்கு போவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் தயக்கத்தை இது வெளிக்காட்டுகிறது. அரசாங்கத்துக்கு இருக்கும் மக்கள் ஆதரவு மற்றும் அதன் நியாயப்பாடு மீதான ஒரு சர்வஜனவாக்கெடுப்பாக உள்ளூராட்சி தேர்தல்கள் பரவலாக நோக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுவிடடது.

தேர்தல்கள் தொடர்பாக அதன் முன்னால் வந்த இரு வழக்குகளில் ஒன்றை உயர்நீதிமன்றம் இவ்வாரம் விசாரணைக்கு எடுக்கிறது. முதல் வழக்கில் தனது தீர்மானத்தை அறிவித்த உயர்நீதிமன்றம் தேர்தல்களுக்கான திகதியை அறிவிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு அவ்வாறு ஏற்கெனவே செய்திருப்பதால் தலையீடு செய்யவேண்டிய தேவை இல்லை என்று கூறியது.

ஆனால், மனுவில் இருந்த குறைபாடுகள் காரணமாக இரண்டாவது வழக்கை உயர்நீதிமன்றம் பரிசீலிக்காமல் அந்த குறைபாடுகள் திருத்திக்கொள்ளப்படுவதற்கு வசதியாக பெப்ரவரி 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. இந்த வழக்கில் மனுதாரர் தற்போதைய பொருளாதார நிலைவரம் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு உகந்தது அல்ல என்ற வாதத்தை முன்வைத்திருக்கிறார்.

இது தேசிய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் அந்த நோக்கத்துக்கு அவசியமான அரசியல் உறுதிப்பாட்டை பேணுவதற்குமே முன்னுரிமை கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற அரசாங்கத் தலைவர்களின் நிலைப்பாட்டுடன் ஒத்துப் போகிறது. உள்ளூராட்சி தேர்தல்களுக்கான செலவினம் சுமார் 1000 கோடி ரூபா என்று மதிப்பிடப்படுகிறது. இந்த தொகையை இந்த வருடத்துக்கான தேசிய பட்ஜெட்டில் அரசாங்கம் ஒதுக்கியிருந்தது. ஆனால், அவ்வாறு ஒதுக்கியிருந்தாலும் தற்சமயம் தேர்தல்களுக்கான செலவினங்களுக்கு கொடுப்பதற்கு தன்னிடம் நிதியில்லை என்று அரசாங்கம் கூறுகிறது.

**திரும்பவும் ஆர்ப்பாட்டங்கள்**

அரசாங்க நிதியை பயன்படுத்துவதில் ஐந்து துறைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் காரணமாக திறைசேரி அதற்கு இருக்கும் இக்கட்டுநிலையை விளக்கிக் கூறியிருக்கிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே நிதியை வழங்குவது என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது என்று திறைசேரி செயலாளர் கூறினார். அத்தகைய சேவைகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அந்த பட்டியலில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு, போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குதல், சேவைகாலக் கொடுப்பனவு மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பட்ஜெட் செயற்திட்டங்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுகள் ஆகியவையே அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரியவையாக உள்ளன. இந்த பட்டியலுக்கு வெளியே உள்ள ஏதாவது செலவினத்துக்கு நிதி தேவை என்றால் விசேட அனுமதி பெறப்பட வேண்டும். உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவது ஜனநாயக முறைமையின் அடித்தளமாகும். அதுவும் ஒரு அத்தியாவசிய சேவையாகவே கருதப்படவேண்டிய தேவை இருக்கிறது.



தேர்தல்கள் நடத்தப்படாவிட்டால் அல்லது தேர்தல்களுக்கான புதிய திகதியொன்று நிர்ணயிக்கப்படாவிட்டால் அரசியல் உறுதிப்பாடின்மை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கடந்த சில வாரங்களாக திறைசேரி செயலாளர், அரசாங்க அச்சகர், மற்றும் அரசாங்க அதிகாரிகள், அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகள் தேர்தல்களை நிறுத்துவதற்கான கூட்டு முயற்சியொன்று மேற்கொள்ளப்படுவதையே வெளிக்காட்டுகின்றன என்று கூறியிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அந்த முயற்சி இலங்கை மக்களின் வாக்குரிமையை வலவிழக்கச்செய்து அவர்களின் இறையாண்மையை ஆபத்துக்குள்ளாக்குகிறது என்று எச்சரிக்கை செய்திருக்கிறது.

சட்டத்தினால் கட்டாயமாக்கப்பட்ட தேர்தல்களைத் தடுப்பதற்கான அத்தகைய முயற்சிகள் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீதான முன்னெென்றும் இல்லாத வகையிலான ஒரு தாக்குதலாக அமைவதுடன் எதிர்காலத்தில் தேர்தல் செயல்முறைக்கு பாரதூரமான அச்சுறுத்தலை தோற்றுவிக்கும். அத்தகைய நடவடிக்கைகள் மக்கள் செல்வாக்கில்லாத நிறைவேற்று அதிகார பீடமோ அல்லது பாராளுமன்றமோ தேர்தல் ஒன்றுக்காக வளங்களை ஒதுக்கீடு செய்வதை குழப்பி தங்களது பிரதிநிதிகளையும் தலைவர்களையும் தெரிவு செய்வதிலிருந்து இலங்கை மக்களை தடுக்கும் பயங்கரமான முன்னுதாரணம் ஒன்றை வகுத்துவிடக்கூடும்.

இத்தகைய பின்புலத்தில், தேர்தல்களை நடத்துவதற்கு தவறுவது எதிரணி கட்சிகளின் பாரிய ஆர்ப்பாட்டங்களுக்கும் கடந்த வருடம் காணப்படக்கூடியதாக இருந்த கொந்தளிப்பான நிலைவரமாக மாறக்கூடிய பரந்தளவிலான போராட்ட இயக்கத்தின் நேரடி நடவடிக்கைக்கும் வழிவகுக்கலாம். அரசாங்கங்கள் தேர்தல்களை ஒத்திவைத்ததால் இலங்கைக்கு ஏற்பட்ட இரு எதிர்மறையான அனுபவங்கள் மீண்டும் நாட்டை அச்சுறுத்துகின்றன.

முதலாவது, 1970 பொதுத்தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் அதற்கு இருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி 1972 ஆம் ஆண்டில் கொண்டுவந்த புதிய ஒரு அரசியலமைப்பின் மூலமாக மேலதிகமாக இரு வருடங்களுக்கு அதாவது 1977 வரை பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடித்தது. இரண்டாவது, 1977 பொதுத் தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்துடன் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் 1982 ஆம் ஆண்டில் சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை ஐந்து வருடங்களுக்கு (ஒரு முழுப் பதவிக்காலத்துக்கு) நீடித்தது. அதன் விளைவாக நாட்டில் பெரும் அனர்த்தங்கள் ஏற்பட்டன.

நியாயப்பாட்டை மீளப்பெறுதல் ஒரு அரசாங்கத்துக்கும் அதன் கொள்கைகளுக்குமான ஆதரவை அல்லது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை தேர்தல்கள் மக்களுக்கு வழங்குகின்றன. உணர்வுகளை அடக்கிவைக்காமல் மக்கள் அவற்றை வெளிப்படுத்துவதற்கு தேர்தல்கள் உதவுகின்றன. சர்வஜனவாக்கெடுப்புக்கு பிறகு ஒரு வருடத்திற்குள் மக்கள் மனங்களில் குமுறிக்கொண்டிருந்த விரக்தி 1983 ஆம் ஆண்டில் தமிழ் மக்களை இலக்குவைத்து பாரிய இனவன்செயலாக வெடித்தது. அது முழு அளவிலான இனக்கிளர்ச்சிக்கும் உள்நாட்டுப் போருக்கும் வழிவகுத்தது. அந்த இரு சந்தர்ப்பங்களிலும் தேர்தல் செயல்முறைகளை சீர்குலைத்த அரசாங்கங்கள் அவற்றின் அதிகாரத்தின் உச்சியில் இருந்த வேளைகளிலேயே அந்த விதிவசமான தீர்மானங்களை எடுத்தன.



**கலாநிதி ஜெகான் பெரேரா**

ஆனால், தற்போதைய நிலைவரம் அதற்கு முற்றிலும் மாறபட்டதாக இருக்கிறது. தற்போதைய அரசாங்கம் மக்களின் ஆணையின் அடிப்படையிலான ஒன்று என்று கருதப்படமுடியாததாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய அரசாங்கம் அது பதவியில் இருப்பதற்கான நியாயப்பாட்டை வலுப்படுத்தவேண்டிய தேவை இருக்கிறது. ஜனநாயக செயற்பாடுகளுடன் தொடர்புடைய கருமங்கள் உட்பட சட்டங்களை நேர்மையான முறையில் பின்பற்றுவதன் மூலமாகவே அதைச் செய்யமுடியும்.

கடந்த வருடம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையை பதவிவிலக நிர்ப்பந்திப்பதில் மக்கள் போராட்ட இயக்கம் வெற்றியடைந்த வேளையில் இருந்து அரசாங்கத்தின் நியாயப்பாடு சவாலுக்கு உட்படுத்தப்பட்டுக்கொண்டே வருகிறது. தேர்தலுக்கு போகாமல் புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவையுடன் தன்னை மீளவடிவமைத்துக் கொண்டமையே அரசாங்கத்தின் சாதனையாகும். இது அதிகாரத்தில் இருப்பதற்கு அரசியலமைப்பை பின்பற்றிய ஒரு சட்டபூர்வ அரசாங்கம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அரசாங்கத்தின் நியாயப்பாடு கேள்விக்குரியது. சட்டபூர்வத்தன்மை என்பது சட்டத்துக்கு பொருத்தமாக அமைவதேயாகும். ஆனால் நியாயப்பாடு என்பது பொதுவில் மக்களுக்கு ஏற்புடைய தார்மீக மற்றும் நேர்மையான பாதையைப் பின்பற்றுவதுடன் சம்பந்தப்பட்டதாகும். தேர்தல்களை தாமதிப்பது அரசாங்கத்தின் நியாயப்பாட்டை பலப்படுத்தப் போவதில்லை. மாறாக அதை மேலும் அரித்துச்சென்று ஜனநாயகத்துக்கு பாரதூரமான அச்சுறுத்தலாக அமையும். தேர்தலை நடத்தத் தவறுவது இரண்டாவது மக்கள் போராட்ட இயக்கத்துக்கு வழிவகுக்கலாம். அதை அரசாங்கத்தினால் சமாளிக்கமுடியாமல் போகும்.

கடந்த கால ஜனநாயக சிதைவுகளினதும் அவற்றைத் தொடர்ந்து வந்த தோல் விகளினதும் அனுபவங்களை கொண்டவர்களை உள்ளடக்கியதாகவே தற்போதைய அரசாங்கத்தின் தலைமைத்துவம் இருக்கிறது. திடீரென்னு ஆபத்தானதாக மாறக்கூடிய எத்தகையதொரு சூழ்நிலையில் தாங்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். இத்தகைய பின்புலத்தில் அரசாங்கம் அதன் அடுத்த நடவடிக்கைக்காக உயர்நீதிமன்றத்தின் எதார்பார்த்திருக்கக்கூடியது சாத்தியம். அரசாங்கத்தின் எதிர்வினையை வடிவமைப்பதில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் முக்கியமானதாக அமையக்கூடியது சாத்தியம்.

ஒரு குறுகிய கால ஒத்திவைப்புக்கு பின்னர் என்றாலும் கூட, உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவது தேசிய நலன்களுக்கு உகந்ததாக இருக்கும்.ஜனநாயக செயல்முறையின் முதன்மை போற்றிப் பேணப்படுவது அவசியம். அதனுடன் கூடவே, பொருளாதார மீட்சிக்கு தேவையான அரசியல் உறுதிப்பாட்டை உத்தரவாதம் செய்வதில் அரசாங்கத்தினதும் எதிரணியினதும் பங்கேற்பை வேண்டிநிற்கும் மாற்றத்துக்கான ஒரு வாய்ப்பாக நெருக்கடியை மாற்றுவதற்கான சாத்தியம் வரும். ●

# முதலைக்குடா மகா வித்தியாலய அதிபராக சுந்தரநாதன் பதவியேற்பு



மட்டக்களப்பு, பெப். 22

மட்டக்களப்பு மேற்கு வலய முதலைக்குடா மகா வித்தியாலய அதிபராக இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த வைர முத்து சுந்தரநாதன் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கடமையை ஏற்றுக் கொண்டார்.

அங்கு அதிபராக இருந்த ரி. கோபால பிள்ளை தேர்தலில் அபேட்சகராக இருப்ப தால் அவர் விடுமுறையில் சென்றிருந் தார்.

பதவியேற்பு வைபவத் தில் மட்டு. மேற்கு வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் டி.யசோதரன், முன்னாள் அதிபர் சிவ. அகிலேஸ் வரன், பட்டிப்பளை உப தவிசாளர் பொன். கோபாலபிள்ளை, உப அதிபர் ரி.சிவநடேஸ், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ். பரமேஸ்வரநாதன் ஆகி யோர் கலந்துகொண்ட னர். (அ)

# விபுலானந்தா வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு!

அம்பாறை, பெப். 22

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு நேற்று முன்தினம் விபுலானந்தா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது .

கல்லூரி அதிபர் எம். சுந்தரராஜன் தலைமை யிலும் கௌரவ தலைவர் முன்னாள் அதிபர் தி. வித்யாராஜன் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக மேனாள் கல்வித்துறை பேராசிரியர் கலாநிதி செல்லையா அருள்மொழி கலந்து சிறப்பித்தார்.

கிழக்கு மேலதிக மாகாண கல்விப் பணிப்பா ளர் எந்திரி.என்.சிவலிங்கம் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் உள்ளிட்ட பல சிறப்பு கௌரவ விசேட அதிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

வைரவிழா சிறப்பு மலர் காரைதீவின் மூத்த சேவையாளர்களான முன்னாள் தவிசாளர்கள் இ. விநாயகமூர்த்தி டாக்டர் எம். பரசுராமன் ஆகியோருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

சமர்ப்பண உரையை கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆலோசகரும் உதவி கல்வி பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.




சகாதேவராஜா நிகழ்த்த

நூல் நயவுரையை ஆசிரியை விபுல இளவல் திருமதி அருந்தவவாணி சசிகுமார் நிகழ்த்தினார்.

முன்னாள் பொன் விழா அதிபரும் கல்வித்துறைத் தலைவருமான பேராசிரியர் கலாநிதி செல்லையா அருள்மொழி , கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எந்திரி என்.சிவலிங்கம் , முன்னாள் வைரவிழா அதிபர் தி.வித்யாராஜன் ஆகியோர் பொன் னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# மோட்டார் சைக்கிள் திருட்டு; உதவியை நாடும் பொலிஸ்!




யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவனின் திருடப் பட்ட மோட்டார் சைக்கிளை கண்டுபிடிக்க பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடி யுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட கோண்டாவில் சந்தியில் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிள் திருடப் பட்டுள்ளது. இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத் தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவனால் முறைப் பாடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மோட்டார் சைக்கிளின் விவரத்தை பகிரங் கப்படுத்தி அதனை அடையா ளம் கண்டால் தகவல் வழங்கி உதவுமாறு பொலிஸார் அறி வித்துள்ளனர். (ஐ-03)

கல்வி tv CHANNEL-1

**22.02.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**22.02.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# அம்பாறையில் வெள்ளத்தால் 1500 குடும்பங்களுக்கு பாதிப்பு

அம்பாறை, பெப். 22

**அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக தொடர்ந்து பெய்ந்து கனமழை காரணமாக, தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் முழ்கியுள்ளதுடன், மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.**

இந்நிலையில், திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் 240 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியதுடன், திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 10க்கு மேற்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகள் வெள்ளத்தில் முழ்கியுள்ளன.

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று, மக்களின் நிலைமைகளை பார்வையிட்டார்.

1,500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், வெள்ளம் காரண மாக பாதிக்கப்பட்டுள்ளன என பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் தெரிவித்தார்.

கிராமங்களில் உள்ள வெள்ள நீரை வெளியேற்றும் பணியில், திருக்கோவில் பிரதேச செயலக அனர்த்தப் முகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து விநாயக புரம் மீனவ சங்க நிர்வாகிகள், தம்பிலுவில் உரக்கை விவசாய அமைப்பு நிருவாகிகள், இராணுவத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து விநாயகபுரம், கோரைக்களப்பு, திருக்கோவில், முறாவோடை, தம்பிலுவில், பெரிய முகத்துவாரம் என்பன அகழப்பட்டு, வெள்ளநீர் கட லுக்கு விடப்பட்டது.



இதேவேளை, ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரி வில் உள்ள பல பிரிவுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதேநேரம், அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்கள், பாடசாலைகள் சிலவற்றில் வெள்ளம் புகுந்துள்ள நிலையில், அலுவலகங்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதேநேரம் அறுவடைக்குத் தயாராகியிருந்த வயல் நிலங்க ளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, ஆலை யடி வேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையிலான கணக்காளர் க. பிரகஸ்பதி, சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட பிரதேச செயலக அதிகாரிகள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் நேரில் சென்று கள ஆய்வு மேற் கொண்டனர். (அ)

# உயிருக்கு போராடும் யானைக்கு சிகிச்சை



மட்டக்களப்பு, பெப். 22

மட்டக்களப்பு, கொம்மாதுறை தீவு பகுதியில், காயப்பட்ட காட்டு யானை, 10 நாள்களாக உயிருக்குப் போராடிவருகிறது. மட்டக்களப்பு, அம்பாறை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிகிச்சையளித்து, பராமரித்து வருகிறார்கள்.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொம்மாதுறை தீவுப் பகுதியில் காட்டு யானை, காலில் ஏற்பட்ட சூட்டுக் காயம் காரணமாக நடக்க முடியாமல், உயிருக்குப் போராடி வந்தது.

குறித்த யானை, கட்டுத் துப்பாக்கி சூட்டுக்கு உள்ளாகியிருக்கலாம் எனவும் காலில் துப்பாக்கிச் சூடு பட்டுள்ளதால் எலும்பு உடைந்திருக்கலாம் எனவும் அம்பாறை வனஜீவராசிகள் திணைக்களத்தின் வைத்தியர் நிஹால் புஷ்பகுமார தெரிவித்தார்.

மட்டக்களப்பு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், விழுந்து கிடந்து உயிருக்குப் போராடும் யானைக்கு உணவளித்து பராமரித்து வருகின்றனர். (அ)

# ஆஸி. அன்பாலய அனுசரணையில் திராய்க்கேணி மக்களுக்கு உலருணவு




அம்பாறை, பெப். 22

கல்முனை றோட்டரிக் கழகம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திராய்கேணி கிராமத்தில் வசிக்கின்ற வறிய மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் 30 குடும்பங்களுக்கு ஒவ்வொன்றும் 5000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.

இதற்கான நிதியை அன்பாலயம், அவுஸ்திரேலியாவின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் குடும்பத்தினர் வழங்கியுள்ளனர்.

கல்முனை றோட்டரி கழகத் தலைவர் றோட்டேரியன் விஜயரத்தினம் விஜயசாந்தன் தலைமையிலான றோட்டரி உறுப்பினர்கள் அங்கு சென்று அதனை வழங்கினர்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரிசி,பருப்பு,கோதுமை மா, சீனி,சோயா என்பன உட்பட்ட 20 கி.கி நிறையுடைய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கழக பொருளாளர் றோட்டரியன் எம்.சிவபாத சுந்தரம், றோட்டரியன் நாசர் உள்ளிட்ட நான்கு அங்கத்தவர்களுடன், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (அ)

# "கலார்ப்பணா" நாட்டிய நிலையத்தின் 15ஆம் ஆண்டு நிறைவும் நூல் வெளியீடும்

மட்டக்களப்பு, பெப். 22

"கலார்ப்பணா" நாட்டிய நிலையத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் "கலார்ப்பணம்" நூல் வெளியீடும் மட்டக்களப்பில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

"கலார்ப்பணா" நாட்டிய நிலையத்தின் இயக்குனர் கலா வித்தகர், நடனக்கலைமாமணி திருமதி.சசிகலாராணி ஜெயராம் தலைமையில் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ப சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராஜதுரை அரங்கில் மிகப்பிரமாண்டமாக இடம்பெற்றது.

அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய "சதங்கை நாதாம்ருதம் - 02" நிகழ்வுக்கு ஆன்மீக அதிதியாக



மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜூம் நிகழ்விற்கு பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது "கலார்ப்பணம்" நூல் அதன் ஆசிரியர் திருமதி. சசிகலாராணி ஜெயராமினால் வெளியீட்டு வைக்கப்பட்டு அதன் முதற்பிரதிகள் அதிதிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது "கல்லூரர் பெருவலம்" எனும் பல்திறன் இறுவெட்டு வெளியிட்டுவைக்க ப்பட்டதுடன், பிரதேச பிரபலங்கள் மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றது. (அ)

# தேர்தல் ஒத்திவைப்பை கண்டித்து கந்தளாயில் மக்கள் ஆர்ப்பாட்டம்

திருமலை, பெப். 22

தேர்தலை ஒத்திவைத்து, ஜனநாயகத்தை தடுக்கும் அரசாங்கத்தின் கோழைத்தனமான செயற்பாட்டுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், கந்தளாய் பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை செயற்பாட்டாளர் சட்டத்தரணி அருன் ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிண்ணியா செயற்குழு உறுப்பினர்களான எம்.இ.எச்.எம் ராபி, அஷ்ஷெய்ஹ் பஷீர் ஆகியோருடன் பல சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர். (அ)

# தேசிய சமாதான பேரவையின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்



அம்பாறை, பெப். 22

தேசிய சமாதான பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட, இனப்பிரச்னைகள் சார்ந்த விடயங்களின்போது, எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது தொடர்பான மாவட்ட ரீதியிலான கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசனின் வழிகாட்டலில், மொழிகள் மற்றும் இன மேம்பாட்டு மாவட்ட உத்தியோகத்தர் பிரதிஷ்கரனின் ஒருங்கிணைப்பில் இறக்காமம் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ். எம் றஸ்ஸான் (நளீமி) தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல், அம்பாறை மாவட்ட தேசிய சமாதான பேரவையின் திட்ட முகாமையாளர் உவைஸ் மதனி , அம்பாறை பள்ளிவாசல் தலைவர் யூசுப், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல் தௌபிக், றுஹுணு லங்கா அமைப்பின் தலைவர் கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜௌபர் (நளீமி), திட்ட இணைப்பாளர் ஜனாப் எம்.எஸ்.எம் இக்ராம் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# உக்ரைனுக்கு நிதியுதவி வழங்குகின்றது ஜப்பான்

ரோக்கியோ, பெப். 22

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் ஓர் ஆண்டை நிறைவு செய்ய உள்ளதையொட்டி உக்ரைனுக்கு 5.5 பில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ரூ.45 ஆயிரத்து 487 கோடி) நிதியுதவி வழங்குவதாக ஜப்பான் நாட்டின் பிரதமர் புமியோ கிஷிடா அறிவித்துள்ளார்.

ரோக்கியோவில் இடம் பெற்ற உலகளாவிய மன்றத்தில் பங்கேற்று அங்கு உரையாற்றும் போதே அவர் இது குறித்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உக்ரைன் இன்னும் ரஷ்ய படையெடுப்பின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய தாக்குதல்களால் மோசமாக பாதிக்கப்பட்ட உக்ரைன் மக்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப அவர்களுக்கு உதவி தேவை. எனவே உக்ரைனுக்கு 5.5 பில்லியன் டொலர் நிதியுதவியை ஜப்பான் வழங்குகிறது.

மேலும் போர் ஓர் ஆண்டை நிறைவு செய்வதை குறிக்கும் வகையில் 24-ம் திகதி உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பங்கேற்புடன் ஜி-7 மாநட்டை நடத்த முடிவு செய்துள்ளேன்-என்றார். (அ)

# பிரேசிலில் கனமழை!



பிரேசிலியா, பெப். 22

பிரேசில் நாட்டில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்றது.

குறிப்பாக, அந்நாட்டின் சவொ பாலோ மாகாணத்தில் கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது.

கனமழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரேசிலில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 36 ஆக உயர்வடைந் துள்ளது. பலர் படுகாயமடைந் துள்ளனர்.

கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் சாலை போக்குவரத்து தடைபட்டுள்ளதால் பொதுமக்கள் பேராபத்தில் சிக்கியுள்ளனர்.

எனவே, மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உக்ரைன் படையின் தாக்குதலில் ரஷ்ய துருப்புக்கு பாரிய இழப்பு!



லண்டன், பெப். 22

உக்ரைனின் கிழக்கு நகரான வுக்லிடரில் இடம்பெற்ற தாக்குதலில் ரஷ்ய துருப்பினர் பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளதாக பிரித்தானிய புலனாய்வுத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நகரத்தில் உள்ள உக்ரைனிய பாதுகாப்பு வலயத்தை ரஷ்ய துருப்பினர் உடைத்துக் கொண்டு செல்ல முனைந்த வேளையிலேயே அதிக அளவிலானவர்கள் உயிர் இழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி, இந்த நகரத்தில் ரஷ்யர்களை எதிர்கொள்வது சிரமமாக இருந்தபோதிலும், தமது தரப்பினர் உபயோகித்த யுக்தி மூலம் எதிரிகளுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தி வெற்றி கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக புதிய பொருளாதார தடையைக் கொண்டு வருவது குறித்து பெல்ஜியத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் சந்திக்கவுள்ளனர்.

எதிர்வரும் 24ஆம் திகதி உக்ரைனுக்கு எதிரான ஆக்கிரமிப்பு யுத்தத்தை ரஷ்யா ஆரம்பித்து ஒரு வருடம் நிறைவடைகின்றது.

# புதிதாக இரண்டு நிலஅதிர்வுகள் துருக்கியை மீண்டும் உலுக்கின!

## ஏற்கனவே இடியுண்ட பல கட்டடங்கள் பொறிந்தன!



அங்காரா, பெப். 22

**பெரும் பூகம்பங்களால் நிலை குலைந்து போயிருந்த துருக்கியின் தென் பகுதியைப் புதிதாக இரண்டு நில அதிர்வுகள் உலுக்கியிருக்கின்றன.**

என்ன செய்வது என்று தெரியாமல் பலரும் தெருக்களில் தலைதெறிக்க ஓடினர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பீதியடைந்த பலர் வீதிகளில் ஓடுவதைக் காட்டும் வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருக்கின்றன.

புதிய நில அதிர்வுகளால் மூன்று பேர் உயிரிழந்ததுடன் 216 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆறாம் திகதி பேரழிவு ஏற்பட்ட பிரதேசங்களில் இடிபாடுகளிடையே இருந்து ஆட்களை மீட்கும் பணிகள் பல பகுதிகளில் முடிவுக்கு வந்திருந்த சமயத்திலேயே அங்கு புதிய அதிர்வுகள் இடம் பெற்றுள்ளன.

இந்த நூற்றாண்டின் பேரழிவு என்று வர்ணிக்கப்படுகின்ற இந்த இயற்கை அனர்த்தத்தில் சிரியாவிலும் துருக்கி நாட்டிலுமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை நாற்பதாயிரத்தைக் கடந்துள்ளது.

சக்தி வாய்ந்த நில அதிர்வுகள் கடந்த 6 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தின் பின் அதிர்வுகள் என்றே நம்பப்படுகின்றன.

கடல் நீரின் மட்டம் 50 சென்ரி மீற்றர்கள் வரை உயரலாம் என அஞ்சப்பட்டதால் கரையோரங்களில் வசிப்போர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளி யேற்றப்பட்டனர்.

நேற்று முன் தினம் இரவு உள்ளூர் நேரப்படி இரவு 20:04 மணிக்கு முதலாவது அதிர்வு தெற்கே சிரியா எல்லையோரம் அன்ராக்யா மற்றும் அடானா பகுதிகளை உலுக்கி எடுத்தது. ரிச்டர் அளவில் அது 6.4 புள்ளியாகப் பதிவாகியது. சற்று நேரத்தில் 5.8 அதிர்வு கொண்ட அடுத்த நடுக்கம் அதே பகுதிகளை மீண்டும் தாக்கியது.

கடந்த 6 ஆம் திகதி நில அதிர்வுகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட துருக்கியின் ஹடாய் மாகாணத்தையே புதிய அதிர்வுகள் மீண்டும் தாக்கியிருக்கின்றன. அங்கு ஏற்கனவே இடியுண்டு பேரழிவுடன் காணப்பட்ட பிரதேசங்கள் புதிய அதிர்வுகளால் குலுங்கின என்று செய்திகள் தெரிவிக்கின்றன. அரைகுறையாய் இடிந்தும் ஈடாடிய நிலையிலும் காணப்பட்ட பல கட்டடங்கள் புதிய அதிர்வுகளால் பெரும் சத்தத்துடன் இடிந்து வீழ்ந்தன என்று அங்கு மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூறியிருக்கின்றனர்.

புதிதாக மீண்டும் நிலம் குலுங்கியதை அடுத்து (அ)

# அமெரிக்க அதிபர் பைடன் கீவ் நகருக்கு திடீர் விஜயம்!

## போலந்துப் பயண நிகழ்ச்சி இடையே உக்ரைன் மண்ணில் தரையிறங்கினார்



கீவ், பெப். 22

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இன்று எதிர்பாராத திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கீவ் நகரில் போய் இறங்கினார். அவரது வருகையால் உக்ரைன் தலைநகரம் பெரும் பரபரப்புக்குள்ளானது.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்புத் தொடங்கிய பிறகு உக்ரைனுக்கான தனது முதலாவது பயணத்தைப் போரின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் அண்மிக்கின்ற சமயத்தில் மேற்கொண்டிருக்கிறார் பைடன்.

அமெரிக்க அதிபர் கீவ் நகரில் உக்ரைன் அரசுத் தலைவர் ஷெலென்ஸ்கியைச் சந்தித்தார். இன்னும் மேலதிக ஆயுத உதவிகள் உக்ரைனுக்கு வழங்கப்படும் என்று அவர் அப்போது தெரிவித்தார் என அறிவிக்கப்படுகிறது.

கீவ் நகரில் சூரிய ஒளியில் பைடனும் ஷெலென்ஸ்கியும் ஒன்றாக நடந்து செல்வதைப் படங்கள் காட்டுகின்றன. பின்னர் அவர்கள் இருவரும் அதிபர் மாளிகையில் கூட்டாகச் செய்தியாளர் சந்திப்பை நடத்தினர். நகரில் தேவாலயம் ஒன்றினுள் இருந்து இரு தலைவர்களும் வெளியே வந்தபோது வான் தாக்குதல்களை எச்சரிக்கும் சைரன் ஒலி எழுப்பப்பட்டதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

“இதற்கு முன்னர் கீவ் நகருக்கு ஆறு தடவைகள் வந்திருக்கிறேன். இந்த நகரம் என் இதயத்தின் ஒரு பகுதி என்பதைக் கட்டாயம் சொல்லியே தீரவேண்டும்” - என்று பைடன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஓராண்டுக்கு முன்பாக உக்ரைனை ஆக்கிரமித்ததன் மூலம் புடின் முற்று முழுதாகத் தவறிழைத்துவிட்டார். அவர் பலவீனமான ஓர் உக்ரைனை எதிர்பார்த்தார். மேற்குலகம் இரண்டுபட்டு நிற்கும் என்று தப்புக் கணக்குப் போட்டுத் தவறிழைத்துவிட்டார். அவரது வெற்றிகரமான போர்தோல்வியடைந்துவிட்டது. -இவ்வாறு பைடன் அங்கு மேலும் தெரிவித்தார்.

பைடனின் ரகசிய விஜயம் தொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்ட ஓர் அறிக்கையில், “உக்ரைனின் ஜனநாயகம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றில் அமெரிக்காவின் அசைக்க முடியாத மற்றும் நிலையான அர்ப்பணிப்பை” பைடனின் விஜயம் உணர்த்துவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிபர் பைடன் நேற்று முதல் மூன்று தினங்கள் போலந்து நாட்டில் விஜயம் செய்வார் என்றே அவரது நிகழ்ச்சி நிரலில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் நடுவிலேயே எதிர்பாராத-ரகசியப்- பயணமாக அவர் கீவ் நகருக்குச் சென்றிருக்கிறார். பைடனின் வருகையை ஒட்டிப் போலந்து-உக்ரைன் எல்லைப் பகுதிகளிலும் கீவ் நகரத்திலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

பைடனுக்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்கில் போலந்து - உக்ரைன் வான் பிராந்தியங்களில் நேற்று முன் தினம் இரவு முதலே அமெரிக்க ராணுவ விமானங்களின் நடமாட்டங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. விமானப் பயணங்களைப் பதிவு செய்கின்ற பிளைற் ரடார் இணையத் தளத்தில் இத்தகவல் தெரியவந்துள்ளது. (அ)

### மகளிர் உலகக் கிண்ணம்:

# அயர்லாந்தை வீழ்த்திய இந்தியா அரையிறுதியில்!




கேப்டவுன், பெப். 22

அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் டக்வேர்த் - லூயிஸ் முறையில் 5 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்திய அணி மகளிர் உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

மகளிர் உலகக் கிண்ணத் தொடர் தென்னாபிரிக்காவில் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. ஸ்மிருதி மந்தனாவின் அதிரடி துடுப்பாட்டத்தால் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்களை குவித்தது.

இதில், மந்தனா 56 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 87 ஓட்டங்களை விளாசி இந்தியா பலமான நிலையை அடைய உதவினார். சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் மந்தனா பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் இதுவாகும்.

முதலாவது விக்கெட்டில் ஷபாலி வர்மாவுடன் 62 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்திய மந்தனா, 2ஆவது விக்கட்டில் அணித் தலைவி ஹர்மன்ப்ரீத் கோருடன் மேலும் 52 ஓட்டங்களைப் பகிர்ந்தார். ஷபாலி வர்மா 24 ஓட்டங்களையும் ஹார்மன்ப்ரீத் 13 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களைவிட ஜெமிமா ரொட்றிக்ஸ் 19 ஓட்டங்களை பெற்றார்.

அயர்லாந்து பந்துவீச்சில் லோரா டிலேனி 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 8.2 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 54 ஓட்டங்ளை பெற்றிருந்தபோது கடுங்காற்றுடன் மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது.

அயர்லாந்தின் ஆரம்பம் சிறபப்பாக அமையவில்லை. அமி ஹன்டர் (1), ஓலா ப்ரெண்டர்காஸ்ட் (0), ஆகிய இருவரும் முதலாவது ஓவரிலேயே ஆட்டமிழந்தனர். ஆனால், அதன் பின்னர் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய கெபி லூயிஸ், அணித் தலைவி லோரா டிலேனி ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 3ஆவது விக்கெட்டில் 52 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்தியாவுக்கு சவால் விடுத்தனர்.

அவர்களின் துரதிர்ஷ்டம் மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது. அப்போது டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி வெற்றி இலக்கு 60 ஓட்டங்களாக இருந்தது. அதன் பின்னர் ஆட்டம் கைவிடப்பட்டதால் இந்தியா 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கெபி லூயிஸ் 5 பௌண்ட்ரிகள் உட்பட 32 ஓட்டங்களுடனும் லோரா டிலேனி 3 பௌண்ட்ரிகள் அடங்கலாக 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். (ஐ)

## இந்தியாவுடனான டெஸ்ட் ஆஸியின் வோர்ணர் விலகல்!



புதுடில்லி, பெப். 22

இந்தியாவில் நடக்கும் டெஸ்ட் தொடரில் எஞ்சிய இரு போட்டிகளிலிருந்தும் அவுஸ்திரேலியாவின் தொடக்க ஆட்டக்காரரான டேவிட் வோர்ணர் விலகியுள்ளார்.

இந்தியாவில் நடக்கும் போர்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரில் ஆஸி. அணிக்கு எதிராக 2 போட்டிகளில் வென்று இந்தியா முன்னிலையில் உள்ளது.

இந்த இரு அணிகளிடையேயான மூன்றாவது போட்டி மார்ச் 1ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கு முன்னதாக, அவுஸ்திரேலியாவின் நட்சத்திர துடுப்பாட்ட டேவிட் வோர்ணர் தொடரின் எஞ்சிய இரண்டு போட்டிகளிலும் இருந்து விலகியுள்ளார்.

டில்லியில் நடந்த போட்டியில் முகமது சிராஜ் வீசிய பந்தில் வோர்ணரின் கையில் காயம் ஏற்பட்டு தற்போது தீவிரமாகியள்ளது. இதற்கான சிகிச்சையை பெற அவர் அவுஸ்திரேலியா செல்கிறார். ஒருநாள் தொடரில் இணைந்து கொள்வார்.

இதனிடையே, வோர்ணர் டெஸ்ட் போட்டியிலிருந்து விலகிய நிலையில் கவாஜாவுடன் தொடக்க ஆட்டக்காரராக யார் களமிறங்குவார்கள் என்பதை அவுஸ்திரேலியா அறிவிக்கவில்லை. (ஐ)

## ஹசில்வூட்டும் விலகல்!

சிட்னி, பெப். 22

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான ஜோஷ் ஹசில்வூட் இந்திய அணிக்கு எதிரான எஞ்சிய இரு டெஸ்ட்களிலும் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர், குதிக்கால் பகுதியில் ஏற்பட்டுள்ள தசைநார் காயம் காரணமாக இந்தியாவுடனான முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் பங்கேற்காமல் இருந்தார். இந்நிலையில், போட்டியில் பங்கேற்பதற்கான முழு உடல் தகுதியையும் அவர் இன்னும் அடையவில்லை என்பதால் இந்தியாவுக்கு எதிரான எஞ்சியுள்ள 2 டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் ஜோஷ் ஹசில்வூட் விலகினார் என்று கூறப்பட்டது.





## ஐ. பி. எல். தொடரில் ஜேமிசன் ஆடமாட்டார்!

வெலிங்டன், பெப். 22

நியூசிலாந்து சகலதுறை வீரர் கைல் ஜேமிசன், இந்த வாரம் முதுகில் ஏற்பட்ட காயத்துக்காக அறுவை சிகிச்சை மேற்கொள்ளவுள்ளார். இதையடுத்து, ஐ. பி. எல். 2023 தொடரிலிருந்து அவர் விலகவுள்ளார்.

ஜனவரி முதல் நியூசிலாந்தில் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வந்த ஜேமிசன், தற்போது சொந்த மண்ணில் நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குத் தெரிவானார்.

எனினும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து காயம் காரணமாக ஜேமிசன் விலகினார். அவருக்கு முதுகில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால் மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு அவரால் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகவலை நியூசிலாந்துத் தலைமைப் பயிற்சியாளர் கேரி ஸ்டட் உறுதி செய்துள்ளார்.

ஐபிஎல் 2023 போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் நியூசிலாந்தின் சகலதுறை வீரரான கைல் ஜேமிசனை ஒரு கோடி இந்திய ரூபாய்க்கு சென்னை சுப்பர் கிங்ஸ் தெரிவு செய்தது.

இந்நிலையிலேயே, சத்திர சிகிச்சையால் அவரால் விளையாட முடியாது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இது குறித்து ஜேமிசன் எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹர்மன் ப்ரீத் புதிய சாதனை!




கேப்டவுன், பெப். 22

இந்திய மகளிர் அணியின் தலைவர் ஹர்மன்ப்ரீத் கௌர் கிரிகெட்டில் புதிய சாதனையை படைத்துள்ளார்.

அவர் தலைமையிலான இந்திய அணி தென்னாபிரிக்காவில் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடி வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டி அவரின் 150ஆவது இருபது - 20 போட்டியாகும்.

இதன் மூலம் அதிக சர்வதேச இருபது - 20 போட்டிகளில் விளையாடியவர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

இதேசமயம், இந்திய ஆடவர் அணியின் தலைவர் ரோஹித் சர்மாவின் சாதனையையும் அவர் கடந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் அதிக போட்டிகளில் விளையாடியோராக ஹர்மன்ப்ரீத் - 150 போட்டிகள், ரோஹித் சர்மா- 148 போட்டிகள், சுசி பேட்ஸ் - 143 போட்டிகள்.

# முட்டைக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, பெப். 22

சந்தையில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர்கள் தெரிவித்தனர்.

நுகர்வோர் சேவை அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் பிரகாரம் முட்டைக்கான அதிகூடிய விலை 44 ரூபாவாகவும், வெள்ளை முட்டை ஒன்றின் விலை 44 ரூபாவாகவும், சிவப்பு முட்டை ஒன்றின் விலை 46 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அதிக விலைக்கு கூட சந்தையில் முட்டை கிடைப்பதில்லை என நுகர்வோர் கூறுகின்றனர்.

இதேவேளை, முட்டைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள் முட்டை வர்த்தகத்தில் இலாபம் ஈட்ட முடியாத காரணத்தினால் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழிப் பண்ணை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

முட்டை தட்டுப்பாட்டுக்கு தீர்வாக முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்துவது டன் உள்ளூர் சந்தைப்படுத்தல் வலையமைப்பு வீழ்ச்சியடைவதாகவும் குணசேகர தெரிவித்தார்.

இதேவேளை, முட்டைப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் சில நாட்களில் அனைத்து ஹோட்டல்களும் மூடப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். (அ)

# தற்போதைய ஆட்சியில் மேலும் வரி அதிகரிக்கும்

## எச்சரிக்கின்றது எதிர்க்கட்சி



கொழும்பு, பெப். 22

**தற்போதைய ஆட்சியில் மேலும் வரி அதிகரிக்கப்படும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

அரச வருவாயை அதிகரிக்க உலக வங்கி 2015 ல் அறிவுறுத்திமைக்கு இணங்க அதற்கான நடவடிக்கையை எடுக்கும் போது பெரிய நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்தமையை கண்டறிந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

பின்னர் இந்த பெரிய நிறுவனங்களுக்கான வரியை தனது அரசாங்கத்தின் முதல் வரவு-செலவுத் திட்டத்தில் நீக்கிய கோட்டாபய ராஜபக்ஷவும் இந்த நிலைமைக்கு பொறுப்பு என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கோட்டபாய ராஜபக்ஷ இந்த முடிவை எடுத்ததன் காரணமாக 800 பில்லியன் இழப்பு ஏற்பட்டது என்றும் இரு மாதங்களுக்குப் பின்னர் கொரோனா மருந்துக்குப் பணம் இல்லாமல் தவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் மேலும் வரி மற்றும் கட்டண அதிகரிப்புகளை பொது மக்கள் மீது சுமத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (அ)

# நாய்க்குட்டிகளின் மீது காரை ஏற்றி கொன்ற கோடீஸ்வர வர்த்தகரின் மனைவிக்கு பிணை





கொழும்பு, பெப். 22

வீதியில் நின்ற இரண்டு நாய்க் குட்டிகளை மிருகத்தனமாக காரை ஏற்றிச்சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணை நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

வீதியில் நின்ற இரண்டு நாய்க் குட்டிகளின் மீது கார் ஒன்று அலட்சியமாக ஏறிச் செல்வதும், கொல்லப்பட்ட நாய்க்குட்டிகளின் அருகில் தாய் சோகமாக அமர்ந்திருக்கும் காட்சிகளும் அண்மை நாட்களில் வெளியாகி பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது.

காரைச் செலுத்தி வந்த 23 வயதான இளம் பெண்ணை மதுரட்ட பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இந்த இளம்பெண் பதிய பெல்லல்ல பிரதேசத்தில் உள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் மனைவி எனவும், இவருக்கும் கோடீஸ்வர வர்த்தகருக்கும் அண்மையில் திருமணம் நடைபெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பெண் தனியாக காரை ஓட்டிக்கொண்டிருந்தபோது விபத்து நடந்தது.

இரண்டு நாய்க்குட்டிகள் மீது ஏறிச்சென்ற கார் அவரது கணவரின் சகோதரருக்கு சொந்தமானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் டுபாயில் தொழில் செய்து வருவதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸ்ஸ் விசாரணையில், அந்தப் பெண் விபத்து நடந்ததை ஒப்புக்கொண்டார். எதிர்திசையில் இருந்து ஒரு பஸ் வந்ததாகவும், மேலும் பல வாகனங்கள் அருகிலேயே நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அவ்வழியாக செல்ல இடம் குறைவாக இருந்ததாகவும், அதுவே விபத்தை ஏற்படுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார்.

விபத்திற்குப் பிறகு தான் பயந்துவிட்டதாகவும், அதனால் தான் நிறுத்தாமல் வாகனத்தை ஓட்டிச் சென்றதாகவும் பொலிஸாரிடம் அவர் கூறினார்.

விலங்கு வதைச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த இளம் பெண்ணை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 23 வயதான இளம்பெண், மிருகவதைச் சட்டத்தின் கீழ் வலப்பனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, அவர் ரூபா 100,000 சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கு ஜூன் முதலாம் திகதி மீண்டும் அழைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இறக்குமதி செய்யப்படும் பழங்கள் விலை குறைவு

கொழும்பு, பெப். 22

இறக்குமதி செய்யப்படும் பழங்களின் விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் சந்தையில் அதிகரித்துள்ள அப்பிள், ஒரேஞ்ச் உள்ளிட்ட பல வகையான பழங்களின் விலைகள் குறைந்துள்ளதாக அவர்கள் குறிப் பிட்டனர்.

அத்துடன், உள்ளூர் வியாபாரிகள் வழங்கும் வாழைப்பழம், பப்பாளி, அன்னாசி போன்ற பழங்களின் விலை மேலும் அதிகரித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## நடு வீதியில் தகராற்றில் ஈடுபட்ட

# 2 இராணுவ உயரதிகாரிகள் உடனடியாகப் பதவி நீக்கம்!

கொழும்பு, பெப். 22

தாமரைத் தடாக அரங்கின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் எல்.எஸ்.பாலச்சந்திர மற்றும் முல்லைத்தீவு படைத் தலைமையத்தின் பிரிகேடியர் சுரேஷ் பெரேரா ஆகியோர், அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் இராணுவம் தெரிவித்துள்ளது.

பணிமூப்பை கணக்கெடுக்காமல் வாகனத்தை முந்திச் சென்றதாக குறிப்பிட்டு, இரண்டு அதிகாரிகளும் வீதியோரத்தில் தகராற்றில் ஈடுபட்டதையடுத்து இருவரும் பணி நீக்கப்பட்டனர்.

பெப்ரவரி 15 ஆம் திகதி தம்புள்ளையில் உள்ள இயந்திர காலாட்படை படைப்பிரிவில் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக சென்றபோது அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிலுவையில் உள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்தார்.

அதிகாரிகள் வகித்து வந்த பதவிகளை நீக்கியதுடன், அவர்களுக்கு வழங்கப்படும் பல வசதிகளும் குறைக்கப்பட்டுள்ளன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்ற எட்டு பிரிகேடியர்களில் பாலச்சந்திரவும் ஒருவர்.

அதிகாரிகள் தங்கள் மனைவிகளுடன் நிகழ்ச்சிக்குச் சென்றுகொண்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

இராணுவ அதிகாரி ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேஜர் ஜெனரல் பயணித்த காரை, பிரிகேடியர் பயணித்த வாகனம் முந்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஆத்திரமடைந்த மேஜர் ஜெனரல், பிரிகேடியரின் காரை முந்திச் செல்லும்படி தனது சாரதிக்கு அறிவுறுத்தினார்.

அதன்படி, மேஜர் ஜெனரலின் சாரதி பிரிகேடியரின் வாகனத்தை முந்திச் சென்று நிறுத்தினார். மேஜர் ஜெனரல் வாகனத்திலிருந்து இறங்கி பிரிகேடியரின் சாரதியை திட்டியுள்ளார். பணிமூப்பு பாராமல் வாகனத்தை முந்திச் சென்றதற்காக சாரதியை திட்டி அவரை தாக்க முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரலின் மனைவியும் காரில் இருந்து வெளியே வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

அப்போது, காரை விட்டு இறங்கிய பிரிகேடியர் சுரேஷ் பெரேரா, மேஜர் ஜெனரல் பாலச்சந்திர தனது சாரதியை தாக்க முற்பட்டபோது, தனது சாரதி எந்த தவறும் செய்யவில்லை எனவும், வீதியில் பயணிக்கும்போது பணி மூப்பு பின்பற்றவேண்டும் என இராணுவச் சட்டத்தில் கூறப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தில் ஒழுக்கம் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாக இருப்பதால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (அ)

# நீதிமன்றிலிருந்து அழைத்து சென்றபோது தப்பியோடிய கைதி இந்தியாவில் தஞ்சம்!

மன்னார், பெப். 22

மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்காக வவுனியா சிறைச்சாலையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்ட வேளை தப்பிய ஓடிய இரண்டு கைதிகளில் ஒருவர் நேற்று செவ் வாய்க்கிழமை காலை மண்டபம் அகதிமுகாமில் தஞ்சமடைந்துள்ளார் என தெரியவருகின்றது.

குற்றம் ஒன்றின் காரணமாக மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் தப்பி ஓடிய மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான செல்வராஜ் சிந்துஜன் கடல் மார்க்கமாக மண்டபம் அகதி முகாமில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தஞ்சமடைந்துள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

சிந்துஜனின் தந்தை செல்வ ராஜ் கடந்த ஞாயிற்றுக்கிழமை ராமேஸ்வரம் நகர் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கி ழமை காலை சிந்துஜன் மண்டபம் அகதிமுகாமில் தஞ்சம் அடைந்துள்ளதால் உளவுத் துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் குறித்த நபர் மண்டபம் அகதி முகாமில் உள் ளமை தெரிய வருகிறது.

குறித்த நபர் வவுனியா சிறைச்சாலையில் குற்றம் ஒன்றுக்காக தடுத்து வைக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டு மீண்டும் வவுனியா சிறைச் சாலைக்கு கொண்டு செல்லப் பட்டபோது கைவிலங்குடன் தப்பிச் சென்றார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த நபர் தலைமன்னாரில் இருந்து படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. (அ)

## சஜித்...

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் மூளாய் - வதிரன்புலோ தனியார் மண்டபத்திலும், ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் அனலைதீவு ஐயனார் கோவில் முன்றலிலும் நடக்கும் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்பார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ-03)

## அம்பாறை...

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தமிழரசு கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து, தமிழரசு கட்சி அந்தப் பிரதேச சபையில் ஐக்கிய தேசிய கூட்டமைப்பு என்ற கட்சியின் தராசு சின்னத்தில் போட்டியிடும் என்று தெரிவிக்கப்பட்டது. சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் ஆதரவில் இந்தக் கட்சி இயங்குவதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் இந்தக் கட்சியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் ரவூப் ஹக்கீம், சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இது தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

"அரசியல் சம்பந்தமாக முடிவு ஒன்று எடுப்பதானால் அல்லது ஒப்பந்தம் செய்வதானால் நிச்சயமாக அரசியல் குழு கூடி முடிவு எடுத்தால்தான் அது சரியானதாக இருக்கும். நானும் கேள்விப்பட்டேன். கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட பின்னர் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு பெற்ற ஐக்கிய தேசிய கூட்டமைப்பு என்ற சுயேச்சை குழுவுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக அறிந்தேன். யார் யாருடன் ஒப்பந்தம் செய்வது என்பது இல்லையா?

சுமந்திரன் ஹக்கீமுடன் ஒப்பந்தம் செய்கிறார் - செய்திருந்தால் எனக்கு தெரியாது. தமிழரசு கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் என்ற ரீதியில் 13 ஆண்டுகள் நான் இந்த கட்சியில் இருக்கிறேன் எனக்கு தெரியாது. எனக்கு மட்டுமல்ல அரசியல் குழுவிலுள்ள யாருக்கும் தெரியாது. இது சுமந்திரனின் சொந்த நிறுவனம் - சொந்தவீடு போன்று நடந்து கொண்டிருக்கிறது. யாரோடு போய் ஒப்பந்தம் செய்கிறார். தலைமைத்துவத்துக்கு தெரியாது. அதுவும் எங்கே போய் ஒப்பந்தம் செய்கிறார்? இதைத்தான் கவனிக்க வேண்டும்.

முல்லைத்தீவு என்பதும ஒப்பாரும் மிக்காரும் இல்லாத எங்களின் தலைவன் யுத்தம் செய்த இடம். இங்கு போர் முடிந்த பின்னர் 2009இல் நீராவிப்பிட்டி என்ற இடத்தில் தமிழரின் பூர்வீக சொத்தான காடுகளை அழித்து ரிஷாத் பதியுதீன் முஸ்லிம்களை குடியேற்றினார். அங்கு, இப்போது பெருவாரியாக முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். இப்போது, முஸ்லிம்கள் தராசு சின்னத்தில் வாக்கு கேட்கும்போது நாம் அவர்களுக்கு புத்துணர்வூட்டுகிறோம். முஸ்லிம் மக்களுடன் எமக்கு பிரச்னையில்லை.

ரிஷாத் இடத்தை பிடித்துக் கொடுத்தார் இப்போது ஹக்கீமும் சுமந்திரனும் ஒப்பந்தம் செய்கிறாராம். இறுதியாக என்ன நடக்கும் என்றால், உங்களுக்கு தெரியும் அம்பாறைக்கு - திருகோணமலைக்கு என்ன நடந்தது என்று. திருகோணமலையை சீரழித்து விட்டார் சம்பந்தன் அவர்கள். அங்கு, இனி எவரும் (தமிழர்) வெற்றிபெற முடியாது. யார் வருவார்கள் - எந்த இனத்தை சேர்ந்தவர்கள் வருவார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இப்போது, அதேவிடயத்தை சுமந்திரன் முல்லைத்தீவில் அரங்கேற்றுகிறார். அவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) பாரம் கொடுக்க இதை அரங்கேற்றுகிறார். நாம் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள்ல. ஆனால், யாராக இருந்தாலும் எமது காணி - நிலம் பறிபோவதை நாம் அனுமதிக்க முடியாது - என்றார். (ஐ)

## தேர்தலை...

வியாழக்கிழமை காலை 9.30 மணி வரை பாராளுமன்றத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஒத்திவைத்தார்.

நேற்று பாராளுமன்றம் கூடி . முக்கிய நிகழ்வுகள் ஆரம்பமானபோது, ஐக்கிய மக்கள் சக்தி, சுத்திர மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் எம். பிக்கள் சபைக்கு நடுவிலும் சபாநாயகரின் இருக்கைக்கு அருகிலும் கூடி தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது அவர்கள் பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர்.

இதனால், சபாநாயகரால் சபை நடவடிக்கைகளை தொடர முடிய வில்லை. சபையை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை யடுத்தே இன்று காலை வரை சபை சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டது.

உள்ளூராட்சி தேர்தல்கள் 2023 மார்ச் 09ஆம் திகதி நடைபெறும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு முதலில் அறிவித்தது. இந்நிலையில், அரச நிறுவனங்கள் ஒத்துழைக்கவில்லை என்பதால் தேர்தலை உரியநேரத்தில் நடத்த முடியாது என்று தேர்தல்கள் திணைக்களம் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே எதிர்க்கட்சி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டது. (ஐ)

## உள்ளூராட்சி...

வந்த மகிந்த ராஜபக்ஷவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்படவில்லை. அத்துடன், தேர்தலை பிற்போட வேண்டிய தேவை ஏதும் தற்போது கிடையாது. உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். அத்துடன், கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக உள்ளோம்.

நெருக்கடியான காலகட்டத்திலும் தேர்தல்கள் பல நடத்தப்பட்டுள்ளன. ஆகவே, தேர்தலுக்கு அச்சமடையத் தேவையில்லை. அரசியல் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் நாட்டு மக்களுக்கு உண்டு என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது - என்றார். (ஐ)

## கச்சதீவு...

03 ஆம் திகதி அதிகாலை ஐந்து மணி முதல் யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்திலிருந்து குறிக்காட்டுவான் வரையில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 03 ஆம் திகதி அதிகாலை ஐந்து மணி முதல் முற்பகல் 10 மணி வரை குறிக்கட்டுவான் வரை அரச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

அத்துடன், அதிகாலை 06 மணி முதல் முற்பகல் 11 மணி வரை குறிக்காட்டுவான் முதல் கச்சதீவுக்கான படகு சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, போக்குவரத்துக் கட்டணமாக 2 ஆயிரம் ரூபாய் அறவிடப்படவுள்ளது.

மேலும் வெளிமாவட்டங்களிலிருந்து தங்களது சொந்த படகுகளில் வருகை தருபவர்கள், வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள கடற்படை முகாமில் அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதோடு, 03 ஆம் திகதி மாலை 06 மணிக்கு முன்னதாக கச்சதீவினை வந்தடையும் வகையில் பயணத்தை ஆரம்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

கச்சதீவுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு காலை உணவை கடற்படையினர் வழங்கவுள்ளதோடு, மதுப் பாவனைக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடையுத்தரவை மீறி மதுபானங்களை கொண்டு செல்லும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டது ஆனால், முழுதாக வழங்கமுடியாது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, பெப். 22

வரவு - செலவு திட்டத்தில் தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் , தற்போது அதனை முழுமையாக விடுவிக்க முடியாதளவு பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாகவே சகல அமைச்சுகளுக்கும் ஒதுக்கப்பட்ட செலவில் 5 சதவீதத்தைக் குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன்,

நாட்டின் நிதி நெருக்கடி குறித்து திறைசேரி நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது. இதனையடுத்து தேர்தல் ஆணைக்குழு அதன் நிலைப்பாட்டை தெரிவித்துள்ளது. எனவே, எந்தவகையிலும் ஆளும் கட்சி தேர்தலை ஒத்திவைப்பதற்கு துணை போகவில்லை என்றும் கூறினார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தலை நடத்தி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் நாம் முன்னின்று செயல்படுவோம். நாம் எதிர்க்கட்சியில் அங்கத்துவம் வகித்த போது நாட்டில் இது போன்ற பொருளாதார நெருக்கடிகள் காணப்படவில்லை. எந்த பிரச்னைகளும் இல்லாத நிலையிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டமை காரணமாகவே நாம் சர்வதேசத்தை நாடினோம்.

ஆனால், தற்போது முற்றிலும் அதற்கு மாறுபட்ட நிலைமையே காணப்படுகிறது. எனவேதான் தேர்தலுக்கான நிதியை வழங்குவது நெருக்கடியாகும் என்று திறைசேரியும் , நிதி இன்றேல் தேர்தலை நடத்துவது கடினமாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவும் அறிவித்துள்ளன.

இதில் எந்தவகையிலும் அரசாங்கத்தின் தலையீடுகள் இல்லை. சர்வதேச நாணய நிதியமோ அல்லது வேறு எந்தவொரு சர்வதேச அமைப்போ தேர்தலை நடத்துமாறு எமக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை.

எந்தவோர்அமைச்சிற்கும் வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி முழுமையாகக் கிடைக்கப் பெறுவதில்லை. நாட்டின் நிதி நிலைமைகளின் அடிப்படையிலேயே நிதி வழங்கப்படும். அதற்கமையவே இம்முறை தேர்தலுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் , அதனை விடுவிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மாறாக இவ்விடயத்தில் ஆளுங்கட்சியின் எவ்வித தலையீடுகளும் இல்லை - என்றார். (ஐ)

## போதிய...

பிரதான நுழைவாயிலுக்கான பாதுகாப்புக்காக மாத்திரம் இரு பொலிஸாரே நிறுத்தப்பட்டிருந்தனர். தேர்தலுக்கான வாக் குச்சீட்டு அச்சிடும் பணி களின் பாதுகாப்புக்காக 65 பொலிஸ் உத்தியோ கத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் குறித்த பிரிவினரிடம் கோரிக்கை விடுத்ததாகவும் கங்காலியனகே மேலும் தெரிவித்தார். (ஐ)

## நாணய...

மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் தவிர்ந்த எந்தவொரு கட்சியோ, நபரோ அல்லது நிறுவனமோ சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்மொழிவுகளையோ மாற்று வழிகளையோ சமர்ப்பிக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டவுடன் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். அதனை நிறைவேற்றவோ அல்லது நிராகரிக்கவோ வாய்ப்புள்ளது. அதனை நிராகரிப்பதாக இருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினர் சர்வதேச நாணய நிதியத்துக்கு மாற்று யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

எமது நாட்டின் பிரதான கடன் வழங்குநர்களான பாரிஸ் கிளப், இந்தியா மற்றும் சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு செயல்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கு நிதி ஒத்துழைப்பு வழங்குவதற்கு பாரிஸ் கிளப் உத்தரவாதம் அளித்துள்ளது. இந்தியா தமக்கு தனித்துவமான முறையை பின்பற்று கிறது. எவ்வாறாயினும், எதிர்வரும் 23ஆம் திகதி இந்தியாவின் பெங்களூரில் நடைபெறவுள்ள ஜி-20 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் அவர்களின் நிலைப்பாடு குறித்து அறிவிக்கப்படும் - என்றும் தெரிவித்தார். (ஐ)

# அமரசிங்க விடுதலை

கொழும்பு, பெப். 22

இலங்கையின் பிரபல யூடியூப் பயனாளர் சேபால் அமரசிங்க தொடர்பில் தாக்கல் செய்திருந்த குற்றச்சாட்டில் இருந்து அவரை விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று உத்தரவிட்டார்.

தலதா மாளிகை தொடர்பில் அவமரியாதையான கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் சேபால் அமரசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறான குற்றங்களை மீண்டும் செய்யமாட்டேன் என அவர், பகிரங்க மன்னிப்பு கோரியமையை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## யாழ்...

போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும், நாளை (இன்று) முதல் மருத்துவக்கழிவுகள் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மருத்துவ கழிவுகளை கோம்பையன்மணல் மயானத்தில் எரியூட்டுவதற்கான நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், இதற்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா தடையாக இருக்கிறார் என்று சுகாதாரப் பிரிவினர் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (ஐ)

## தேர்தலுக்கான...

முன்வைத்து அரசாங்கம் தேர்தலை பிற்போட அனுமதிக்க முடியாது. இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வோம். அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை அனைத்து தேர்தல்களையும் ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகார பகிர்வு பற்றி அடிக்கடி பேசுகிறார். ஆனால், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் இரண்டையும் நடத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்கிறார். நிதி நெருக்கடிகள், தேர்தலை நடத்த முடியாது என்று முன்னர் எந்த அரசாங்கமும் கூறவில்லை. இன்று எதற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்? உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் ஒத்திவைத்தால் எதிர்காலத்தில் ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் அதே முறையை மீண்டும் மீண்டும் பயன்படுத்தும். இவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## கியூ.ஆர். நீக்கப்படும்

கொழும்பு, பெப். 22

எரிபொருள் விநியோகத்திற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கியூ.ஆர் முறைமை எதிர்வரும் 3 மாதங்களின் பின்னர் நீக்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான யோசனை அடுத்த மாதம் பாராளுமன்றில் முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை

கொழும்பு, பெப். 22

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அந்த கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பழைய 79 ஐ படிக்காமல் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை படிக்கவேண்டும். இதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசத்தை பார்க்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
17 - 11 - 1939



**மறைவு**
20 - 02 - 2023

### வேலுப்பிள்ளை கருணாகரன்

*(சுங்க இலாகா இளைப்பாறிய பிரதம சிறாப்பர், லங்கா பார்மசிக்யூட்டிக்கல் உரிமையாளர்)*

யாழ். நயினாதீவு 15ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு 06, 28 அலெக்சாண்டர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கருணாகரன் அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை – நாகம்மா தம்பதியரின் ஏக புத்திரரும், காலஞ்சென்ற கனகசபை, – அன்னப்பிள்ளை (கரம்பொன்) தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதி (இளைப்பாறிய பிரதம மருந்தாளர்) அவர்களின் ஆருயிர் கணவரும், பிரதீபன், பிரசன்னா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகம்மா, பாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜயகுலராணி, மதுரலிங்கம், காலஞ்சென்ற ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலேந்திரா, மகேந்திரன், வித்தியாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான பரிமளபாக்கியம், இந்திராவதி, அம்பிகாவதி, சந்திராவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கரிஷ்மா, மயங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.02.2023) புதன்கிழமை அன்று மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் நாளை (23-02-2023) வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் கிரியை நடைபெற்று, நண்பகல் 12:30 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

28, அலெக்சாண்டர் வீதி,
கொழும்பு 06.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
**பாலினி (மருமகள்) - 006591462890**
**பிரசன்னா (மகன்) - 0094742183283**
**பிரதீபன் (மகன்) - 006597361195**



# பொருளாதார நெருக்கடி ஓரளவுக்கு குறைந்துள்ளது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

நாட்டில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டுமெனவும், தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத்திட்டத்தின் காரணமாக கடந்த சில மாதங்களாக இருந்த பொருளாதார நெருக்கடிகள் ஓரளவு குறைந்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு வீழ்ச்சியடைந்த நாட்டுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியத்தை தவிர உலகில் வேறு எந்த நிறுவனமும் இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசின் வேலைத் திட்டத்திற்கு மாற்று முன்மொழிவுகள் இருப்பின், அவற்றை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கண்டி மாவட்ட வர்த்தகர்கள் மற்றும் சட்டத்தரணிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

சில அரசியல் கட்சிகள் இதற்கான முன்மொழிவுகளை முன்வைக்காமல் மக்களிடம் பொய் சொல்லி அரசியல் நாடகம் ஆடுவதாக தெரிவித்த ஜனாதிபதி, நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்துடன் எவருக்கும் விளையாட முடியாது எனவும் வலியுறுத்தினார்.

இந்த சவால்கள் தொடர்பில் தெரியாமல் தான் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்கவில்லை எனவும், தடைகள் வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நிறுத்தப் போவதில்லை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி-

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை தெளிவுபடுத்துவதற்கும், இந்நிலையிலிருந்து மீள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காகவும் இச்சந்திப்பு இடம்பெறுகின்றது.

நாம் இன்று கடினமான காலங்களை கடந்து கொண்டிருக்கிறோம். ஒரு வீட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்போது வீட்டிலுள்ளவர்கள் அதை உணர்கிறார்கள். ஒரு வணிகம் வீழ்ச்சியடைந்தால், வர்த்தகர்கள் அதை உணர்கிறார்கள். ஆனால் ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் அதை ஒட்டுமொத்த மக்களும் உணருவார்கள்.

பதினொரு மாதங்களுக்கு முன்னர் நாம் இந்த நிலையை எதிர்கொண்டோம். எங்களிடம் எரிபொருள், மின்சாரம், மருந்து எதுவும் இல்லை. ஒரு நாடு என்ற வகையில் நாம் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் முடங்கியது.

நான் ஜனாதிபதியாக பதவியேற்கும்போது இவ்வாறானதொரு பிரச்சினைக்குரிய சூழல் நாட்டில் இருந்தது. ஆனால் முறையான திட்டத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம்.

மேலும், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் வழங்கப்பட்டன. சரியான நேரத்தில் உரங்களை வழங்கியதால், இந்த முறை பெரும்போகத்தில் வெற்றிகரமான அறுவடை கிடைத்துள்ளது.

இப்போது எரிபொருள் வரிசைகள் இல்லை. மின்சாரம் உள்ளது. அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை முந்தைய நிலையை விட படிப்படியாக சிறந்த நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று பணவீக்கம் உயர்ந்துள்ளது. வட்டி விகிதம் மிக அதிகம். அதனால், வர்த்தக சமூகம் சிரமங்களை எதிர்நோக்குவதை நாம் அறிவோம். சட்டத்தரணிகளும் தங்கள் பணியை மேற்கொள்வதில் சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது. நாட்டின் பல அடிப்படைப் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்கியுள்ளோம் என்றே கூறவேண்டும். மேலும் பல பிரச்னைகள் நமக்கு முன்னால் உள்ளன.

ஒரு நாடு வங்குரோத்தடையும் போது, சர்வதேச நாணய நிதியத்திடம் தான் செல்லவேண்டும். அதைத் தவிர, ஒரு நாடு வங்குரோத்தடையும் போது உதவி செய்யும் வேறு எந்த அமைப்பும் உலகில் இல்லை. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு நாடும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே மீண்டு வந்துள்ளது-என்றார். (அ)

## மின் கட்டண உயர்வுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மனு தாக்கல்

கொழும்பு, பெப். 22

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்ய உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கூறினார். (அ)

# உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும்

## யாழ். வணிகர் கழகம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 22

உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும் என்ன யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்

யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் மின்சாரக் கட்டணங்கள் 66 வீதம் அதிகரிக்கப் பட்டுள்ளமையால் பல்வேறு துறைகளிலும் பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு அரசாங்கம் கட்டாயமாக நிவாரணம் வழங்க வேண்டும்.

குறிப்பாக வர்த்தகத்துறை சார்ந்தோருக்கும் இந்த மின் கட்டண அதிகரிப்பானது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் புதிய நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பானது மேலும் அதிகரித்து சாதாரண மக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டிவரும்

குறிப்பாக அரிசி ஆலைகள் அரிசி விலையை அதிகரிக்க இருப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள்.

அதேபோல குறிப்பாக மின்சாரத்தில் தங்கி இருந்து உற்பத்தியை மேற்கொள்ளும் சகல துறைகளும் விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்குரிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

ஆகையால் இது சம்பந்தமான உற்பத்தித்துறை சார்ந்தவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது ஒரு வகையில் நிவாரணம் அளிக்கவேண்டும் அல்லது உற்பத்தித்துறை சார்ந்த விடயங்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கவேண்டும். இது சம்பந்தமாக அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆகவே விரைவில் அரசு நிவாரணம் கொடுக்கவேண்டும். தவறும் பட்சத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பை தடுக்க முடியாத நிலை ஏற்படும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.